# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 02.08.2022 supeedsam.com supeedsam@gmail.com







## நுவரெலியா மாவட்டத்தில் வெள்ளத்தின்

# கோர தாண்டவம்

### கடும் மழை: இருவர் பலி; ஒருவர் காணாமல் போயுள்ளார்; மண் சரிவினால் போக்குவரத்துகள் பாதிப்பு; மலையக ரயில் சேவை பாதிப்பு ; நீர்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு; வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின;







(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் (31) இரவு தொடக்கம் பெய்து வரும் கடும் மழையினால் இருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காணாமல் போயுள்ளார். நீர்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. புகையிரத சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. பொது போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், கினிகத்தேனை, பொல்பிட்டிய, ஹிட்டிகேகம, பொகரவெவில பிரதேசத்திலிருந்து பாயும் களனி கங்கையின்

02 ஆம் பக்கத்தில்...

## சீரற்ற காலநிலை காரணமாக பாடசாலைகளுக்கு விடுமுறை

நுவரேலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீரற்ற காலநிலை காரணமாக இவ்வாறு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுனர் தெரிவித்துள்ளார்.

## கோட்டாபய நாடு திரும்புவதற்கு சரியான நேரம் இதுவல்ல


முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக்கு திரும்புவதற்கு இது சரியான நேரம் அல்லவென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு நேற்று முன்தினம் (31) அளித்த செவ்வியில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி, பொருளாதார வீழ்ச்சி, காரணமாக நாட்டில் இருந்து வெளியேறினார். அவர் தற்போது திரும்பினால், அவரை, வெளியேற்றுவதற்காக அணிதிரண்ட பல்லாயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் மத்தியில் மீண்டும் எதிர்ப்பலைகளை தூண்டக்கூடும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில், கடந்த ஜுலை 13 அன்று, வான்படை

02 ஆம் பக்கத்தில்...



## கோட்டாவுக்கு முழு வசதியையும் பாதுகாப்பையும் வழங்க வேண்டும்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் இலங்கைக்கு வந்து அரசியலில் ஈடுபட விரும்பினால் அதற்கு வரவேற்பு தெரிவிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இதனைத் தெரிவித்துள்ளார்.

எப்போது வேண்டுமானாலும் இலங்கைக்கு வர கோட்டாபய ராஜபக்ஷவிற்கு முழு உரிமை உண்டு என்றும் அவர் இலங்கை பிரஜை என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும்

02 ஆம் பக்கத்தில்...



## சீன கப்பல் இலங்கைக்கு: தீவிர கண்காணிப்பில் இந்திய கடற்படை!



ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை எதிர்வரும் 11ஆம் திகதி வந்தடையவுள்ள சீன ஆராய்ச்சிக் கப்பலை இந்திய கடற்படை கண்காணித்து வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

செயற்கைக் கோள்கள், ரொக்கெட்டுகள், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் போன்றவற்றை கண்காணிக்கும் நவீன கருவிகளைக் கொண்ட இந்தக் கப்பல் இலங்கைக்கு வருவது குறித்து இந்தியா தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

வடமேற்கு இந்தியப் பெருங்கடல் பகுதியில் விண்வெளி செயற்கைக் கோள் நடவடிக்கைகளை கண்காணிக்க வரும் கப்பல் (யுவான் வாங் - 5) இம்மாதம் 11 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைய உள்ளது.

இதன்படி, எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 17ஆம்

02 ஆம் பக்கத்தில்...











## போராட்டக்காரர்கள் கைது செய்யப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது

கோட்டா கோ கம போராட்டத்தின் ஈடுபட்ட இளைஞர்கள் தற்போது அரசாங்கத்தினால் கைது செய்யப்படுகின்ற நடவடிக்கையினை ஏற்றுக் கொள்ள முடியாது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் காரியாலயம் நேற்று (திங்கட்கிழமை)

02 ஆம் பக்கத்தில்...



சுபீட்சம்
supeedsam@gmail.com
supeedsam.com




சுவிஸ்நாட்டில் சூரிச்மாநிலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்ட வள்ளுவரின் சிலை

# வாழைச்சேனை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் தீர்தோற்சவம்

(க.ருத்திரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான புதுக்குடியிருப்பு வாழைச்சேனை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் தீர்தோற்சவம் ஆடிப்பூர தினமான நேற்று (1) பாசிக்குடா கடலில் பக்தர்களின் ஆரோகரா கோசத்துடன் இனிது நிறைவு பெற்றது.

கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவப் பெரு விழா ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்களும் கிரியை நிகழ்வுகளும் உற்சவ நிகழ்வுகளும் நடைபெற்றது. ஞாயிற்றுக் கிழமை சப்பறத்திரு விழாவும் நடைபெற்றது.

அம்பாளுக்கு விசேட பூசை இடம் பெற்று அம்பாள் உள் வீதி வலம் வந்து பக்தர்கள் புடை சூழ ஆலய முன்றலில் உள்ள தீ மிதிப்பு இடத்திற்கு சென்று தீ மிதிக்கும் நேற்றிக் கடன் செலுத்தும் பக்தர்களுக்கு அருள் ஆசி வழங்கிய பின்னர் வாழைச்சேனை கல்குடா வீதி வழியாக ஆலயங்களை தரிசித்து அடியர்ஊர்வலமாக சென்று பாசிக்குடா கடலில் வழக்கம்போல் தீர்த்தம் ஆடப்பட்டது.

திருவிழாக்கள் யாவும் ஆலயத்ததலைவர் பரராஜசேகரம் தலைமையில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வீ.தயாபரக் குருக்களின் பங்குபற்றுதலுடன் பிரமோற்சவ பிரதம குரு கிரியாஜோதி தேசமான்ய சிவஸ்ரீ வெங்கடசுந்தரராம குருக்கள் நடாத்தி வைத்தார்.



## சீன கப்பல் இலங்கைக்கு: தீவிர கண்காணிப்பில் இந்திய கடற்படை!

திகதி வரை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல் நங்கூரமிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கப்பல் 750 கிலோமீட்டருக்கும் அதிகமான வான்வழி அணுகல் கண்காணிப்பு திறனைக் கொண்டுள்ளது, எனவே இது தென்னிந்தியாவில் உள்ள கல்பாக்கம் மற்றும் கூடங்குளம் போன்ற இந்திய அணு ஆராய்ச்சி மையங்களைக் கண்காணிக்கும் திறன் கொண்டது என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா உள்ளிட்ட துறைமுகங்கள் உட்பட சீனாவால் கண்காணிக்கப்பட வாய்ப்பு உள்ளதால், இந்தியாவின் பல இடங்களில் இருந்து தகவல்களை சேகரிக்க சீனாவுக்கு வாய்ப்பு உள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## கோட்டாவுக்கு முழு வசதியையும் பாதுகாப்பையும் வழங்க வேண்டும்

பாதுகாப்பையும் ஏற்படுத்தி கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை பொதுஜன பெரமுனவின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் செயற்படுவார் என்றும் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

## நுவரெலியா மாவட்டத்தில் வெள்ளத்தின் கோர தாண்டவம்

கிளை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தில் பாட்டியும் (60) மற்றும் பேத்தியும் (05) சிக்குண்டு

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முன்பள்ளிக்குச் சென்ற பேத்தியுடன் வீடு திரும்பிய போது இருவரும் கால்வாயில் விழுந்து நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாட்டியின் சடலம் அப்பகுதியில் உள்ள கால்வாய்க்கு அடியில் கண்டெடுக்கப்பட்டதுடன், பிரதேச வாசிகளும் பொல்பிட்டிய பொலிஸாரும் இணைந்து காணாமல் போன பேத்தியின் சடலத்தை தேடும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

கால்வாயில் கண்டெடுக்கப்பட்ட பாட்டியின் சடலம் கினிகத்தேனை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கினிகத்தேனை விதுலிபுர டெப்லோ கிராமபகுதியில் மண்சரிவு ஏற்பட்டதன் காரணமாக இரண்டு வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளது. இதனால் இரண்டு வீட்டில் இருந்த ஆறு பேரில் 38 வயதான ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும், அவரை தேடும் பணியில் பொலிஸார் ஈடுப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மண்சரிவு மற்றும் பாறைகள் சரிந்து வீதிகளில் விழுந்தமையால் பல வீதிகள் மூடப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்தார்.

அட்டன் -கொழும்பு வீதியில் கினிகத்தேன தியகல பகுதியிலும் பாரிய மண்சரிவு இடம்பெற்றுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை மற்றும் பலத்த காற்றினால் வட்டவளை பிரதேசத்தில் பல தாழ் நிலப் பகுதிகள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளன. கொட்டகலை- கொமர்ஷல் பகுதியிலுள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. குறித்த பகுதியிலுள்ள சிறிய ஆறு பெருக்கெடுத்தமை காரணமாக, சுமார் 50 வீடுகள் நீரில் மூழ்கியதாகவும் குறித்த வீடுகளில் வசித்தவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பொகவந்தலாவை பிரசேத்தில் கெசல்கமுவ ஓயா பெருக்கெடுத்துள்ளமையால், பல இடங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

கினிகத்தேனை - பிட்டவல பிரதேசத்தில் மண்மேடு சரிந்து விழுந்தமையால், அட்டன்- கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

அத்துடன், அட்டன்- கொழும்பு பிரதான வீதியின் அட்டன் தொடக்கம் கித்துல்கல வரையான பல பகுதிகளில் மரங்கள் வீதிகளில் முறிந்து விழுந்துள்ளதுடன், மண்மேடுகளும் சரிந்துள்ளன.

இதேவேளை, அட்டன் நுவரெலியா பிரதான வீதியில் ஆங்காங்கே மண்சரிவுகள் எற்பட்டுள்ளன. தலவாக்கலை நகரத்திற்கு அண்மித்த பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் அட்டன் நுவரெலியா பிரதான வீதியினூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மலையகத்துக்கான ரயில் சேவைகள் முழுமையாக முடங்கியுள்ளது. குறிப்பாக ரயில் பாதையில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதுடன், மண்மேடுகளும் சரிந்து விழுந்துள்ளது.

கொட்டகலை - தலவாக்கலை, கிரேட்வெஸ்டன், ரொசல்ல - வட்டவளை, வட்டவளை - கலபொட, இங்குருஓயா ஆகிய ரயில் நிலையங்களுக்கிடையில் இந்த அனர்த்தங்கள் பதிவாகியுள்ளன.

இதனால் கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரை பயணித்த ரயில், நாவலப்பிட்டி ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை வரை பயணித்த ரயில், அட்டன் ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இன்று கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரையும் பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை வரை பயணிக்கவிருந்த இரண்டு ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக ஆறுகள் நீரோடைகள் ஆகிய பெருக்கெடுத்துள்ளன. நீரேந்தும் பிரதேசங்களில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதன் காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளன.

இதனால் கெனியன் நீர்த்தேக்கத்தின் ஒரு வான்கதவும், மேல் கொத்மலை நீர்தேக்கத்தின் மூன்று வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இதேவேளை, நோர்ட்டன்பிரிட்ஜ் பகுதியில் அமைந்துள்ள விமல சுரேந்திர நீர்த்தேக்கப்பகுதியில் கடுமையான மழை பெய்து வருவதானால் அந்த நீர்த்தேக்கத்தில் ஆறு கதவுகள் ஊடாக நீர் வான்பாய்கின்றன.

மவுஸ்ஸாக்கலை, காசல்பீ, லக்ஷபான, நவ லக்ஷபான ஆகிய நீர்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

எனவே நீர்த்தேக்கத்திற்கு கீழ் தாழ் நிலப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன.

## போராட்டக்காரர்கள் கைது செய்யப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது

திறந்து வைக்கப்பட்டது இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டால் அதில் தமிழர் தரப்பிற்கான தீர்வினை நோக்கிய பயணத்தின் ஆரம்பமாக இருக்க வேண்டும் என்றும் குறித்த அரசாங்கத்தில் அனைத்து கட்சிகளும் அங்கம் வகிக்கின்ற வேளையிலே தமிழர்களின் பிரச்சினை தொடர்பிலே பேசப்பட்டு அதற்கான தீர்வுகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் இதன் போது குறிப்பிட்டார்.

அத்துடன் கோட்டா கோ கம போராட்டத்தின் ஈடுபட்ட இளைஞர்கள் தற்போது அரசாங்கத்தினால் கைது செய்யப்படுகின்ற நடவடிக்கையினை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், தமிழினர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்பதை நான் ஏற்கனவே தெரிவித்திருந்தேன் என்பதையும் இதன்போது சுட்டிக்காட்டினர்.

மேலும் சிங்களத் தரப்புக்களிடமிருந்து நாம் ஏமாறியதைக் காட்டிலும் தமிழ் தரப்பினரிடமிருந்து ஏமாந்தமையே அதிகமாக உள்ளது என்றும் இதன்போது தெரிவித்தார்.

## கோட்டாபய நாடு திரும்புவதற்கு சரியான நேரம் இதுவல்ல

விமானத்தில் நாட்டை விட்டு மாலைத்தீவுக்கு வெளியேறி, பின்னர் அங்கிருந்து சிங்கப்பூர்சென்று,தமது பதவி விலகலை அறிவித்தார். இந்தநிலையில், அவர் மீண்டும் நாடு திரும்பவுள்ளதாக உறுதிபடுத்தப்படாத தகவல்கள் வெளியாகியிருந்தன. இதனிடையே அவருடைய குறுங்கால பயண அனுமதியை மேலும் 14 நாட்களால் (ஆகஸ்ட் 11 வரை) நீடித்து சிங்கப்பூர் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த வார அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், கோட்டாபய ராஜபக்ஷ தலைமறைவாகவில்லை என்றும், அவர் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். இந்தநிலையிலேயே அவர் திரும்பி வருவதற்கான உகந்த நேரம் இதுவென தாம்ணஞண்ணீ; நம்பவில்லை என்று தி வோல் ஸ்ட்பீட் ஜேர்னலுக்கு நேற்று அளித்த செவ்வியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ҐҐநாங்கள் ஏற்கனவே அடிமட்டத்தை அடைந்துவிட்டோம் என்று நான் நினைக்கிறேன். நான் சுரங்கப்பாதையின் முடிவில் ஒளியைக் காண்கிறேன்.

நாம் முடிந்தளவு விரைவாக அதை அடைய முயற்சிக்கிறோம் என்றும் ரணில் தெரிவித்துள்ளார். இலங்கை சுமார் 12 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதை இடைநிறுத்தியது.

அத்துடன் 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் கிட்டத்தட்ட 21 பில்லியன் டொலரை செலுத்த வேண்டியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட உடன்பாடு ஆகஸ்ட் மாத இறுதிக்குள் எட்டப்படும் என்று எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள், உணவு மற்றும் உரங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக அடுத்த ஆண்டு மற்றைய மூலங்களிலிருந்து 3 பில்லியன் டொலர்களை இலங்கை பெற வேண்டும்.

அதேநேரம் இலங்கையர்கள் தங்கள் பொருளாதார சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காண்பதற்கு சில மாதங்கள் ஆகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# நாவலப்பிட்டி பகுதியில் வெள்ளம்

## 100 ற்கும் மேற்பட்ட வீடுகள் பாதிப்பு





(பத்தனை நிருபர் கிஷாந்தன்)

மலையக பிரதேசங்களில் கடுமையான மழை மற்றும் பலத்த காற்றும் வீசப்பட்டு வருகின்றது. இடைவிடாது பெய்து வரும் கடும் மழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்குடன் பாரிய மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பேலி வீதி, பவ்வாகம, சேலம் பிரிட்ஜ், ஒவிட்ட, அயன்போட் ஆகிய பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டதால், பிரதான வீதிகளும், குடியிருப்புகளும் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, வீட்டிற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மற்றும் மோட்டர் சைக்கிள்கள் நீரில் முழ்கியுள்ளது.மழை காரணமாக இப்பகுதியில் 100ற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ள நீரினால் நிரம்பியதுடன், மேலும் சில வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி பகுதியில் உள்ள மகாவெலி ஆற்றிற்கு நீர் வழங்கும் பவ்வாகம ஆற்றில் நீரின் மட்டம் அதிகரித்தால் வெள்ள நீர் இவ்வாறு பெருக்கெடுத்து வீடுகளுக்குள் புகுந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். தமது வீட்டில் ஒரு அறையேனும் இல்லாமல் வீடு முழுவதும் வெள்ள நீராக காணப்படுவதாகவும், தமது அலுமாரியில் வைத்திருந்த பொருட்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள் என பல பொருட்கள் வெள்ள நீரில் சேதமாகியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்டனர். பாதிக்கப்பட்ட 100ற்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த சுமார் 350ற்கும் மேற்பட்டோர் உறவினர்கள் வீடுகளிலும், அயலவர்களின் வீடுகளிலும், பொது இடங்களிலும் தங்க வைக்கப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் பாதிக்கப்பட்டவர்களை இப்பகுதி கிராமசேவகர் பார்வையிட்டுள்ளதோடு, சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டி நகர சபை மற்றும் பிரதேச சபை ஆகியோரின் கவனத்திற்கும், மாவட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

# மடு ஆவணி பெருவிழாவை முன்னிட்டு கோழும்பு மற்றும் அனுராதபுரத்திலிருந்து மடுவுக்கு விடே ரயில் சேவை

## அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தின் மடு பெருவிழாவை முன்னிட்டு கொழும்பு மடு மற்றும் அனுராதபுரத்திலிருந்து மடு புகையிரத நிலையத்துக்கும் விஷேட ரயில் போக்கு சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னாரில் எதிர்வரும் மருதமடு அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு மன்னார் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற முன்னேற்பாடு கூட்டத்தைத் தொடர்ந்து மன்னார் அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்

இவ் வருடம் ஆவணி 15 ந் திகதி நடைபெறுவதற்கான மடு அன்னையின் திருவிழாவுக்கான முன்னேற்பாடு கூட்டம் இன்று திங்கள் கிழமை (01.08.2022) நடைபெற்றது.

இவ் கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் மடு திருத்தலத்தின் பரிபாலகர் ஏனைய திணைக்கள தலைவர்கள் மற்றும் துறை சார்ந்த ஏனை உத்தியோகத்தர்களோடு இது தொடர்பாக கலந்துரையாடினோம்.



அதன் அடிப்படையில் தற்பொழுது உள்ள சூழ்நிலையில் எரிபொருள் நெருக்கடி காணப்பட்டபோதும் இவ் மடு ஆலய பெருவிழாவுக்கு நான்கு இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பு இப்பொழுது காணப்படுகின்றது

ஆகவே இதற்கிணங்க பக்தர்களின் நலன் நோக்கி நாங்கள் திணைக்களங்களின் சேவைகள் தொடர்பாக ஒழுங்குபடுத்தியுள்ளோம்.

அதேவேளையில் விஷேட ரயில் சேவை இவ் விழாவை முன்னிட்டு கொழும்பிலிருந்து மடு புகையிரத நிலையத்துக்கும் அத்துடன் அனுராதபுரத்திலிருந்து மடு புகையிரத நிலையத்துக்கும் எதிர்வரும் 13 . 14 , 15 ந் திகதிகளில் சேவைகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

இவ்வாறு பேரூந்து போக்குவரத்து மடு புகையிரத நிலையத்திலிருந்து மடு ஆலயத்தக்கும் இணைப்பு சேவைகளும் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று நோய் மீளவும் ஆரம்பித்துள்ளதனால் பொது மக்கள் கட்டாயமாக இவ் விழாவுக்கு வருவோர் முகக் கவசம் அணிந்து வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம் என இவ்வாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# அரசாங்கத்தினால் அறிவுருத்தப்பட்ட சட்ட திட்டங்களை சோந்த விருப்பு வேறுப்புக்களுக்கு மாற்றியமைத்து

## செயற்பாடுகின்ற பிராந்திப் பணிப்பாளர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் சுகாதார ஊழியர்களை திட்டமிட்டு பழி வாங்கி வருதாக சுகாதார ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினையால் நாடு பாரிய சவால்களை எதிர் நோக்கி வருகின்றது. இந்நிலைமையை கருத்திற் கொண்ட அரசாங்கம், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்களை தங்களின் பிரதேசத்திற்கு அன்மித்த சேவை நிலையங்களில் கடமையாற்ற அனுமதி வழங்கியுள்ள அதேவேளை சுழற்சி முறையிலான கடமைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கு மாற்றமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் செயற்பட்டுவருவதாகவும், 30 ஆயிரம் பெறுகின்ற சாதாரண சுகாதார ஊழியர்களை தூரப் பிரதேசத்திற்கும், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சலுகைகளை முறையாக வழங்காமலும், அவர்களுக்கான விஷேட விடுமுறைகளை வழங்க முடியாது என்ற கட்டளைகளை வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கு வழங்கியுள்ளதாகவும் இது தொடர்பில் உயரதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, அரசாங்கத்தினால் அறிவுருத்தப்பட்ட சட்ட திட்டங்களை அவரின் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு அமைவாக மாற்றியமைத்து செயற்பாடுகின்ற பிராந்திப் பணிப்பாளரின் நடவடிக்கையில் மாற்றம் இடம்பெறவேண்டும். அவ்வாறில்லாமல் தொடர்ந்தும் இதனை கடைப்பிடிப்பாராக இருந்தால் அவருக்கு எதிராக சுகாதார உழியர்கள் ஒன்றிணைந்து பாரிய ஆர்ப்பாட்டத்தை தொழிற்சங்கத்தின் ஊடாக முன்னெடுப்பார்கள் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை.

# அரசியல் தலைகள் மாற்றும் சந்தர்ப்பவாத அரசியல் வேண்டாம்



தற்சமயம் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான வழிமுறைகள் குறித்து கலந்துரையாடல்கள் இடம் பெற்றாலும், அரசியல் தலைகள் பரிமாற்றம் சம்பந்தப்பட்டவை, அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்ளும் அரசியல் சூதே இத்தகைய பல கலந்துரையாடல்களில் காணக் கிடைப்பதாகவும், இந்நேரத்தில்,தன்னைப் பற்றி சிந்திப்பதை விட நாட்டைப் பற்றி சிந்திப்பதே இடம் பெற வேண்டும் என்பதோடு, அமைச்சர்களின் எண்ணிக்கைகளை அதிகரிப்பதால் நாட்டுக்கு மேலும் சுமைகளை ஏற்படுத்ததாது, புதிய கட்டமைப்பின் கீழ் தேசிய ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றை எட்ட வேண்டும் எனவும் எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று (1) நடைபெற்ற ஒன்றிணைந்த கிராம உத்தியோகத்தர்கள் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு குறித்து சிந்திக்கவும், நாட்டுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய தருணமும் வந்துள்ளதாகவும், சுயநலத்திற்கு பதிலாக, பரோபகார மனோபாவமும் சந்தர்ப்பவாதத்திற்கு பகரமாக நாட்டு மக்களைப் பற்றி சிந்திக்கும் மனோபாவமும் வேண்டும் எனவும், சலுகைகள்,வரப்பிரசாதங்களைப்பெற்று மக்கள் மீது சுமையை ஏற்றுவதற்கு பதிலாக அறிவார்ந்த முறையில் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு சகல கட்சிகளும், எதிர்க்கட்சிகளும், நாடாளுமன்ற குழு அமைப்பின் ஊடாக சாதகமான பங்களிப்பை வழங்க முடியும் என தெரிவித்த அவர், வரப்பிரசாதங்களை பெற்று கூடிய சுகபோக வாழ்க்கை வாழ்வதற்கு இது நேரமல்ல எனவும்,தற்சமயம் பங்கேற்பு அபிவிருத்தி மூலம் நாட்டை கட்டியெழுப்புவதே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் தானும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி நம்பிக்கை கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு கோத்துக்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஆடிப்பூர பால்குட பவனி




(ரக்ஸனா)

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு கொத்துக்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஆடிப்பூர பால்குட பவனி திங்கட்கிழமை(01) இடம் பெற்றது.

மாரசூரனை வதைத்து மாரியம்மன் எனப் பெயர் கொண்ட உலகமெல்லாம் இரட்சத்துவரும் அன்னை மாரியம்மன் அகல் விளக்கு எரியவைத்த காலத்துக்கு முந்திய காலமாக மட்டக்களப்பில் அருள்பாலித்து வருகின்ற அம்பாளின் ஆடிப்பூர பால்குட பவனியானது

ஆலய பிரதம குரு ஸ்ரீ நிஜோத் குருக்களின் தலைமையில் விநாயர் வழிபாடுகளுடன் ஆரம்பமாகி விசேட கும்ப பூஜைகள் நடைபெற்றதுடன் மட்டக்களப்பு ஆணைப்பந்தி ஆலயத்தில் இருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட அடியார்கள் மஞ்சள் நிற கலாச்சார உடை அணிந்து ஆரம்பிக்கப்பட்ட பாற்குடப்பவனியானது மட்டக்களப்பு - திருமலை பிரதான வீதியூடாக பாற்குடபவனி ஆலயத்தை வந்தடைந்தது.

இதன்போது மூலமூர்த்தி மற்றும் பாரிபால மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக பூசைகள் நடாத்தப்பட்டு,

அதனைத்தொடர்ந்து பிரதான கும்பம் ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டு விசேட பூஜைகள் நடத்தப்பட்டதுடன் வேத,மேள வாத்தியங்கள், நாதங்கள் முழங்க அடியார்களின் அரோகரா கோசத்துடன் அம்மனுக்கு பால் அபிஷேகம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆவணி மடு பெருவிழாவுக்கான ஆய்த்தக் கூட்டம்



( வாஸ் கூஞ்ஞ)

ஆவணி மாத மடு பெருவிழாவுக்காக பக்தர்கள் அதிகமானோர் கலந்து கொள்ள இருப்பதனால் வழமைபோன்று சகல ஆய்த்ததங்களை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டதுடன் அதற்கான கலந்துரையாடல்களும் இடம்பெற்றது.

எதிர்வரும் ஆவணி மாதம் 15 ந் திகதி (15.08.2022) நடைபெற இருக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் யாத்திகர் ஸ்தலமாக விளங்கும் மருதமடு அன்னையின் பெருவிழா தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில்; இது தொடர்பான ஆயத்த கலந்துரையாடல் நடைபெற்றது.

திங்கள் கிழமை (01.08.2022) காலை 11 மணியளவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற இவ் கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மடு பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் மற்றும் இது தொடர்பான திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இவ் ஆவணி மாத பெருவிழாவுக்கு குறைந்தது நான்கு லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுவதாகவும்இவ் விழாவை முன்னிட்டு ஏற்கனவே மடுத் திருதத்தலத்திலுள்ள 380 வீடுகளும் பக்தர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் 200 க்கும் மேற்பட்டவர்கள் இவ் பெருவிழாவை முன்னிட்டு வீடுகளுக்காக விண்ணப்பித்திருப்பதாகவும் மடு பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் இவ் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இவ் விழாவுக்காக தற்பொழுது ஓரிரு குடும்பங்கள் வரத் தொடங்கியுள்ளதுடன் கூடாரங்கள் அமைத்து தங்குவதில் அவர்கள் ஈடுபட ஆரம்பித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.;

வருகை தருபவர்களுக்கான உணவுகள் போக்குவரத்துக்கள் குடிநீர் சுகாதாரம் மின்சார வசதிகள் பாதுகாப்பு போன்ற சகல வசதிகளும் கடந்த காலங்களைப் போன்று மேற்கொள்வதற்கான சகல எற்பாடுகளும் மேற்கொள்வது என இவ் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மற்றும் மடு ஆலயப் பகுதிக்குள் ஒழுக்க சீர்கேடுகள் நடைபெறாதிக்கும் முகமாக பலத்த பாதுகாப்புக்கள் கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியமும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதைத் தொடர்ந்து இவ் பெருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் ஆயத்தங்கள் தொடர்பாக இவ் விழாவுக்கான இறுதி கலந்துரையாடல் எதிர்வரும் 9 ந் திகதி (09.08.2022) மடு ஆலய பரிபாலகரின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆடி மாத பெருவிழாவின்போது போக்குவரத்துக்கான எரிபொருள் கஷ்ட நிலை காணப்பட்டபோதும் எதிர்பார்க்காத நிலையிலும் மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்திருந்தபோதும் திட்டமிட்டபடி சகல திணைக்களங்களும் மிகவும் திறமையாக செயல்பட்டதாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அரச அதிபர் உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

அத்துடன் இம்முறையும் அனைத்து திணைக்களங்களும் சிறந்த முறையில் செயல்படுவார்கள் என தாங்கள் முழு நம்பிக்கையுடன் இருப்பதாகவும் அவர் மேலும் இவ் கூட்டத்தின்போது தெரிவித்தார்.

# கடந்த 10 நாட்களில் காட்டுப்பாதையில் 24 ஆயிரம் பேர் பயணிப்பு





**( காரைதீவு நிருபர் சகா)**

கதிர்காமத்திற்கான காட்டுப்பாதையில் கடந்த 10 நாட்களில் 24 ஆயிரம் பேர் பயணித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த பிரதேசத்திற்கு பொறுப்பான, லாகுகலை பிரதேச செயலாளர் எஸ் . நவநீத ராஜாவிடம் கேட்ட போது .

கடந்த 31ஆ ம் தேதி வரை 22,500 பேர் காட்டுக்குள் பயணம் செய்ததாக இராணுவத்தினரின் பதிவுகள் இருந்து தெரிய வருகிறது என்றும், நேற்றைய தினம் (1) 1500 பேர் அளவிலே காலையிலும் மாலையிலும் காட்டுக்குள் பிரவேசித்ததாக கூறப்படுகின்றது என்று சொன்னார் .

அதேபோல, உகந்தை முருகன் ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க தெரிவிக்கையில்.. இதுவரை காலமும் இல்லாத அளவிலே இம்முறை அதிகளவான அடியார்கள் காட்டுப் பாதையில் பயணித்து இருக்கின்றார்கள். கொடியேற்ற தினத்தன்று அதிகமானோர் அதாவது 8 ஆயிரம் அடியார்கள் பயணித்திருப்பது இதுவே முதல் தடவை ஆகும் என்றார்.


இது இவ்வாறு இருக்க, காட்டிக்குள் தொடர்ச்சியாக மழை பொழிந்து வருவதால் பாதயாத்திரீகர்கள் சிரமப்பட்டு காட்டைக் கடந்து கதிர்காமத்தை அடைய வேண்டி இருப்பதாக கூறப்படுகிறது.

# மனிதாபிமான செயற்பாட்டு நிறுவனத்தின் ஆவணங்கள் திருட்டு









**( வடமலை ராஜ்குமார்)**

திருகோணமலை உவர்மலையில் இயங்கி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான அகம் மனிதாபிமான வள நிலையத்தின் உள்ள ஆவணங்கள் மற்றும் இஇகூங கெமரா சேவர் ஆகியன திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளரும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளருமான கண்டுமணி லவகுகராசா ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

கடந்த 30ம் திகதி அலுவலகத்தை வார விடுமுறைக்காக மூடி அதன் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) மாலை 6.30 மணியளவில் அலுவலகத்தை திறந்த போது அங்கே எனது அறை கதவு உடைக்கபட்டு அங்கிருந்த ஆவணங்கள் சிதைக்கப்பட்டிருந்தன. அதே போல இன்னுமொரு அறையும் உடைக்கப்பட்டிருந்தது. லொக்கரும் உடைக்கப்படடிருந்தது. இஇகூங கெமரா சேவர் திருடப்பட்டிருந்தது.

இது திருடர்களால் நடாத்தப்பட்டதாக நான் நினைக்கவில்லை காரணம் அலுவலகத்தில் மக்களுக்கு வழங்குவதற்கான அரிசி மற்றும் ஏனைய நிவாரணப் பொருட்கள் இருந்தது.அது போல பெறுமதியான மடிக்கனனி கெமரா, கனனித் தொகுதி போன்ற பொருட்கள் இருக்க தக்கதாக ஆவணங்களை மாத்திரம் திருடி இருக்கிறார்கள். இது சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

எமது நிறுவனமானது உரிமை சார்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனநாயக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் போராடுகின்ற அமைப்பு அது மாத்திரம் இல்லாமல் 15 அமைபு;புக்கள் கூட்டணியாக இருக்கின்ற

# எரிபொருளுக்காக முச்சக்கர வண்டிகளை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகள்

**(ரக்ஸனா)**



எரிபொருளுக்காக முச்சக்கர வண்டிகளை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்று வருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இந்த நடவடிக்கை இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தந்தப் பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு அந்தந்தப் பிரதேச பொலிஸ் நிலையங்களில் முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற உத்தரவுக்கேற்ப இந்த நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதனடிப்படையில் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள முச்சக்கரவண்டிகளை ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நெருக்கடி நிலையில் சிரமப்படும் ஏழைகளுக்கு உணவு விநியோகம்





**(ரக்ஸனா)**

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் சிரமப்படும் இல்லாத இயலாத ஏழைக் குடும்பங்களுக்கு உணவு விநியோகம் செய்யும் தர்ம செயல்பாடு ஏறாவூரில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஏறாவூர் சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் எம்.எல். செய்யது அஹமத் தெரிவித்தார்.

இதனடிப்படையில் பயனாளிகளாக அடையாளம் காணப்பட்ட 500 குடும்பங்களுக்கு ஞாயிறன்று 31.07.2022 சிறந்த ஒரு வேளை உணவு வழங்கப்பட்டது.

நிகழ்வில் ஏழைகளான பயனாளிகளுக்கு சமைத்த உணவுப் பொதிகளை வழங்கி வைத்து உரையாற்றிய ஏறாவூர் சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் செய்யது அஹமத், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகளவான மக்கள் தமது தொழில்களை இழந்து நாளாந்த வருமானத்தை இழந்து ஜீவனோபாயத்திற்கு வழியின்றி தமது ஒருவேளை உணவுக்குக் கூட சிரமப்படுவதை அவதானிக்க முடிகிறது. இந்நிலையில் எமது அமைப்பு கொடையாளிகளினதும் பரோபகாரிகளினதும் உதவியைக் கொண்டு சமைத்த உணவு வழங்கப்படுகிறது என்றார்.

ஏழைகளுக்கு உணவு வழங்கும் நிகழ்வில் மேற்படி ஒன்றியத்தின் ஸ்தாபகர் எம்.எச்.எம். இஸ்ஸத், உப தலைவர் எஸ்.எம்.எம். ஹனீபா, பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.ஏ.சி.எம் நஜிமுதீன் உட்பட இன்னும் பல சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.




# மகளீர் எல்லே தோடர்: சேங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது





**(பேரின்பராஜா சபேஷ்)**

2022 ஆண்டுக்கான தேசிய விளையாட்டு விழாவின் முன்னோடியாக நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு விழாவில் மகளீர் எல்லே தொடரில் ஏறாவூர்ப்பற்று சார்பாக பங்குபற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

மட்டக்களப்பு மாவட்ட மகளீருக்கான எல்லே தொடர் ஞாயிற்றுக்கிழமை (31) மட்டக்களப்பு வெபர் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இறுதிப்போட்டி ஏறாவூர்ப்பற்று (செங்கலடி) மற்றும் மண்முனை வடக்கு (மட்டக்களப்பு) பிரதேச செயலகப் பிரிவு விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மண்முனை வடக்கு (மட்டக்களப்பு) அணி களத்தடுப்பினை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஏறாவூர்ப்பற்று சார்பில் பங்குபற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம அணி வழங்கப்பட்ட 30 பந்துகளில் ஐந்து ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மண்முனை வடக்கு (மட்டக்களப்பு) அணி நான்கு ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதனடிப்படையில் ஏறாவூர்ப்பற்று சார்பில் பங்குபற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் ஒரு ஓட்டத்தினால் வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

# SY Production Media நிறுவனத்தினால் சான்றிதழ்கள் வழங்கி வைப்பு



வளர்ந்து வரும் சிறுவர்களின் திறமைகளை வெளிக்காட்டும் முகமாக SY production Media "பிஞ்சு மனம் இது திறமையின் இல்லம்' என்ற நிகழ்வை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

அதனடிப்படையில் இதில் 70ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கிராத், கஸீதா, ஹதீஸ், கதைகள் போன்ற நிகழ்சிகளில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்கள் அண்மையில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதோடு, 30 ஜூலை ஹெம்மாதகமையைச் சேர்ந்த முஸாப் இப்னு அப்துல்லாஹ்விற்கு இச் சான்றிதழ் Sy production mediச் நிறுவனத்தின் பணிப்பாளர் சில்மியா யூசுபினால் தெஹிவளையில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

'பிஞ்சு மனம் இது திறமையின் இல்லம்'என்ற நிகழ்ச்சியில் பங்கு பற்றி திறமைகளை வெளிக்காட்டிய அனைத்து 70 ற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு,

இந் நிகழ்வின் பணிப்பாளர் சில்மியா யூசுப், பிரதம அதிதிகளான சட்டத்தரணி மற்றும் SDJF இன் பணிப்பாளர் ஆசாத், கொழும்பு டைம்சின் பிரதம ஆசிரியர் ரசூல்தீனுக்கும் பங்குபற்றிய குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் இந் நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.

# கிழக்கு மாகாணப் பணிப்பாளராக ஏ.ஜீ.தெய்வேந்திரன் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்







(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் புதிய மாகாணப் பணிப்பாளராக ஏ.ஜீ.தெய்வேந்திரன் நேற்று காலை (01) தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றி வந்த என்.மதிவண்ணன் மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளராக கடந்த 2022.03.31 ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தினால் நியமிக்கப்பட்டதை யடுத்து ஏற்பட்ட வெற்றிடத் திற்கு இலங்கை நிருவாக சேவை தரம் - ஐஐ யைச் சேர்ந்த ஏ.ஜீ.தெய்வேந்திரன் நியமிக்கப்பட்டார்.

இவர், கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் உதவிச் செயலாளராக கடமையாற்றி வந்த நிலையிலேயே ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக நலன்புரிச் சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முதளிதரன், உதவிப் பணிப்பாளர் திருமதி எஸ்.சரண்யா, நிருவாக உத்தியோகத்தர் எ.சுவேந்தர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

# நடுக்காட்டில் வைத்திய முகாம்: அடியார்களுக்கு சிகிச்சை!

## வைத்திய அதிகாரி டாக்டர் லதாகரனின் ஜீவ சேவை!

( காரைதீவு நிருபர் சகா)

கதிர்காம காட்டுப்பாதையில் செல்லும் அடியார்களுக்கு உதவுமுகமாக, நடுக்காட்டில் உள்ள நாவலடி எனுமிடத்தில் வைத்திய முகாம் ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

காட்டுப்பாதை திறக்கப்பட்ட அன்று(22) ஆரம்பித்த இந்த வைத்திய முகாம், தொடர்ச்சியாக எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நடத்தப்படவிருக்கிறது.

முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் அழகையா லதாகரனின் ஏற்பாட்டில் 12வது வருடமாக இந்த வைத்திய சேவை நடுக்காட்டிற்குள் நடத்தப்படுகின்றது . 56 மைல் தூரமான காட்டுப்பாதையின் நடுப்பகுதியில் எவ்வித வசதிகளும் இல்லாத இடத்தில் அடியார்களுக்கு இந்த வைத்திய சேவை நடத்தப்படுவது அனைவராலும் வியந்து பார்க்கப்படுகின்றது.

டாக்டர் அ.லதாகரன் தலைமையிலான வைத்தியர்கள் சுகாதாரதுறை ஊழியர்கள் தமது சொந்த லீவிலே அர்ப்பணிப்பான சேவையை இரவு பகல் பாராமல் செய்து வருகின்றார்கள்.

காட்டுப்பாதையில் பல உபாதைகளுடன் நடந்து வருகின்ற அடியார்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது .

காலிலே ஏற்படுகின்ற நோ மற்றும் சகலவிதமான நோய்களுக்கும் அங்கு தற்காலிக சிகிச்சை வழங்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான அடியார்கள் சென்று அங்கு சிகிச்சை பெற்று சென்றனர். நடுக்காட்டுக்குள் எவ்வித வசதியும் இல்லாத நிலையிலே இத்தகைய வைத்திய சேவையை செய்து வருகின்ற டாக்டர் லதாகரன் தலைமையிலான குழுவினருக்கு அடியார்கள் அனைவரும் நன்றி செலுத்தினார்கள்.



மேலும் ,நாவலடிக்கு வரும் ஒவ்வொரு அடியார்களுக்கும் நடந்து வந்த களையை போக்குவதற்கு இரண்டு பட்டர்களும் ஒரு வெனிவல் தேனீரும் வழங்கப்படுகிறது. தேவையானால் மேலதிகமாகவும் வழங்கப்படுகிறது.

களைத்து வந்த அடியார்களுக்கு அது பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

# கந்தளாயில் 783 லீற்றர் டிசலுடன் இருவர் கைது

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 783 லீட்டர் டீசலுடன் இருவரை (31) கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெகந்தளாய், வென்ராசன்புர பகுதியைச் சேர்ந்த இருவரே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக இரண்டு பரல்களில் மறைத்து வைத்திருந்த நிலையிலே 783 லிற்றர் டீசலை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய 783 டீசலுடன் இரண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




# நள்ளிரவில் 1500 லீற்றர் டீசலுடன் இருவர் கைது!

## காரைதீவு போலீஸ் பொறுப்பு அதிகாரியின் அதிரடி நடவடிக்கை!



( காரைதீவு நிருபர் சகா)

நிந்தவூரிலிருந்து கொண்டு வரப்பட்ட 1500 லிட்டர் டீசல் உடன் இருவர் காரைதீவு பொலிசாரால் கைது செய்யப்பட்டார்கள்.

இச் சம்பவம் நேற்று (1) நள்ளிரவு காரைதீவில் இடம்பெற்றது. காரைதீவு பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர் .எஸ் . ஜெகத் தலைமையிலான குழுவினர் அதிரடியாக அவர்களை நேற்று நள்ளிரவு 12 .27 மணியளவில் மடக்கி பிடித்தார்கள்.

காரைதீவு பிரதான வீதி விபுலானந்த சதுக்கத்தில் உள்ள போலீஸ் சாவடி ஊடாக குறித்த 1500 லீற்றர் டீசலை ஏற்றிய வாகனம் செல்லுகையில் ,அதனை நிறுத்தி சோதனை செய்யும் போது இந்த டீசல் கடத்தல் பிடிபட்டது. நிந்தவூரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் இருந்து கொண்டுவரப்பட்ட 1500 லிட்டர் டீசல் ,மாளிகைக்காட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட வேளையில் இவ் அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாளிகைக்காட்டைச் சேர்ந்த ஏ.இர்பான் என்பவர் இந்த டீசல் கடத்தலிலே ஈடுபட்டிருப்பதாக முதல் கட்ட விசாரணையில் தெரிய வருகிறது. கடத்தலில் ஈடுபட்டதாக கூறப்படும் இருவர் கைது செய்யப்பட்டு நேற்று (1)திங்கட்கிழமை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

1500 லிட்டர் டீசலும் சீல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.



# புதிய அரசியலமைப்பில் மலையக மக்களின் உரிமைகள்!

(ஊடக விளங்கறிவு மையம் (Cmil) நடாத்திய Reform watch நிகழ்ச்சியின் Expert talk இல் சமூக செயற்பாட்டாளர் முரளிதரன் மயூரன் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு)



அப்ரா அன்ஸார்

மலையகம் என்றவுடன் அனைவருக்கும் நினைவில் வருவது இரண்டே விடயம் தான் மலையகத் தமிழர்களும் அவர்களுடைய உரிமைகளும்.மலையகத்தில் வாழ்கின்ற தமிழர்களை மலையகத் தமிழர் எனவும் மலையக பெருந் தோட்டங்களில் தொழில் புரிவோரை மலையக தோட்டத் தொழிலாளர்கள் என்றும் அழைக்கின்றனர். தோட்டத் தொழிலாளர்கள் என்போர் குறிப்பாக இலங்கையின் மத்திய பிரதேசமான மலைப்பிரதேசங்களில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகளுக்காக தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட தமிழர்களைக் குறிக்கும் அதேநேரம் இலங்கையின் மத்திய பிரதேசம் அல்லாத ஏனைய பகுதிகளின் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபடும் தொழிலாளர்களையும் மலையக தோட்ட தொழிலாளர்கள் என்று அழைக்கும் வழக்கம் உள்ளது.இந்த நாட்டின் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்கின்ற பல விடயங்கள் இருந்தாலும் மலையக மக்களின் உழைப்பு, தியாகம் பிரதானமாக இருக்கின்றது . மலைப்பிரதேசத்தில் பச்சைபசேல் என்ற சூழலில் தங்களுடைய அன்றாட ஜீவனோபாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். நாட்டின் நாளா பக்கத்தில் வாழக்கூடியவர்களும் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளுக்காக இன்று பாரிய போராட்டங்களை மேற்கொள்கின்றனர்.ஆனால் மலையக மக்கள் அன்றிலிருந்து அவர்களுடைய உரிமைகளுக்கான போராட்டத்தை இன்று வரை தொடர்ந்துள்ளனர். இலங்கையின் அரசியல் யாப்பில் பல்வேறு சட்டங்கள் ,திட்டங்கள், கொள்கைகள் கொண்டுவரப்பட்டாலும் அவை முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதே உண்மை.

புதிய அரசியலமைப்பில் பல்வேறு விடயங்கள் கொண்டு வரப்பட வேண்டும் , மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றது.அதனடிப்படையில் புதிய அரசியலமைப்பை நோக்கிய பாதையில் மலையக மக்களின் உரிமைகள் உள்வாங்கப்பட வேண்டும் என்பது பல்வேறு தரப்பினது கோரிக்கைகளாக அமைந்துள்ளது. கடந்த காலங்களில் சிவில் அமைப்புகள் பலரையும் ஒன்றிணைத்து பல்வேறு கலந்துரையாடல்களை செய்து அதில் முக்கியமான கோரிக்கைகளை பல்வேறு அடிப்படையில் ஆவணப்படுத்தி புதிய அரசியலமைப்பில் நியமிக்கப்பட்டிருக்கும் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. புதிய அரசியல் யாப்பில் மலையக மக்களின் உரிமைகள் பல்வேறு முக்கிய கோரிக்கைகளாக காணப்படுகின்றன.அதாவது ,இனத்துவ அடையாளம், அடிப்படை உரிமைகள், அதிகார அலகுகள்,மொழி உரிமை, காணி உரிமை,நேரொத்த நடவடிக்கைகள்,இன விகிதாசாரத்துக்கேற்ற பிரதிநிதித்துவம் தேர்தல் முறையும் என்றவாறு முன்வைக்கப்பட்டுள்ளது.



மலையக மக்களுடைய பொருளாதார பிரச்சினை , அரசியலமைப்பு பிரச்சினை நாட்டிலுள்ள தேசிய அமைப்பிலான பிரச்சினைகள் பற்றி பல கோணங்களில் பார்க்க முடிகின்றது.மலையக மக்களுக்கு அரசியலமைப்பு ரீதியாக என்ன தேவையென்றால் இந்த நாட்டில் ஏனைய சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பாதுகாப்பு,உரிமை அவசியமாகின்றது.அதாவது சிறுபான்மை தேசிய இனம் என்ற ரீதியில் ஒரு பாதுகாப்பு தேவை. இவை அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.ஏனெனில் இவர்கள் தொடர்ச்சியாக பேரினவாதத்துக்கும் ,இன ரீதியான பிரச்சினைகளுக்கும் ஆளாகி வருகின்றனர்.அதையும் தாண்டி அவர்கள் மலையகத் தமிழர் என்ற ஒரு தனியான தேசிய இனமென்ற அடையாளத்தை பெற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். தமிழ் மக்களிடையேயும் அவர்களுக்குள்ளே பாரபட்சத்தையும், அரசியல் ரீதியான வேறுபாடுகளையும் கொண்டுள்ளது.எனவே , அவர்கள் ஒரு தனியான தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.தேசிய இனத்துக்குரிய பாதுகாப்பு அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானது.இவை ஏனைய சிறுபான்மை இனத்தவர்களுக்கும் பொறுத்துமாக அமையும்.அதையும் தாண்டி மிக முக்கியமாக மலையக மக்களுடைய காணி உரிமை , அவர்களுடைய வீட்டு உரிமை, முகவரி ஒன்றை கொண்டிருப்பதற்கான உரிமை என்பன அரசியலமைப்பினூடாக கொண்டு வர வேண்டும். உண்மையிலே தோட்டங்களில் வாழ்கின்றவர்களுக்கு அவர்களுக்கென்று ஒரு முகவரியில்லை என்பதே கசப்பான உண்மை.அத்தோடு தோட்டப்புற குடியிருப்புக்கள் கிராமங்களாக மாற்றப்பட வேண்டும் அல்லது கிராம கட்டமைப்புக்கள் கொண்டு வர வேண்டிய அவசரத் தேவையொன்று உள்ளது. இவை அந்த மக்களுக்கு மிக முக்கியமானது.ஏனெனில் அவர்கள் எல்லாவற்றையும் தோட்டத்துறைமார்களிடம், தோட்ட நிர்வாகத்திடமும் அனுமதி பெற வேண்டியதோடு அவர்களுக்கு கீழே அடிமை வாழ்க்கை வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.அவர்களுக்கு ஒரு மரத்தை வெட்ட முடியாது,வீட்டை கட்ட முடியாது, புதிதாக சனசமூக நிலையத்தையோ, நூலகத்தையோ உருவாக்க முடியாது. இவ்வாறு அவர்களுடைய அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.இவை கிராமங்களாக மாற்றப்படும் போது இலங்கையில் வாழக்கூடிய ஏனைய மக்கள் பெறக்கூடிய பல அடிப்படையான உரிமைகள் அவர்களுக்கு கிடைக்கும்.மலையக மக்களில் தோட்டத் தொழிலாளர்கள் 10% காணப்படுகின்றனர். ஏனையவர்கள் கூலி தொழிலாளர்களாகவும், ஆசிரியர்களாகவும், வைத்தியர்களாகவும், பெரிய பெரிய பதவிகளிலும் இருக்கின்றார்கள்.

அதே நேரம் நகரத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்து பணிபுரியக்கூடியவர்களும் இருக்கின்றார்கள். இதில் பெரும்பாலானோர் தொழிலாளர் வர்க்கமாக உள்ளனர். எனவே தொழிலாளர் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதும் மலையக மக்களுக்கு பிரதானமாக உள்ளது.தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை எடுத்துக் கொண்டால் இன்று வரை சரியான தீர்வு வழங்கப்படவில்லை. பல அரசியல்வாதிகள் நம்பிக்கை அளித்திருந்தும் அவை கானல் நீராகவே போயுள்ளது.



எனவே இவர்களுடைய பொருளாதாரப் பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பின் ஊடாக எவ்வாறு தீர்வை பெற்றுக் கொள்வது என்பது தான் இங்கு கேள்விக்குறியாக உள்ளது.

தோட்ட தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள பிரச்சினை என்பது கடந்த காலங்களில் அதிகம் பேசப்பட்டது. அதாவது அவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை கோரி போராட்டம் நடத்துவார்கள் அந்த தொகை பெறுமதி பாதியாக மாறிய பின்னரே அந்த தொகை வழங்கப்படும்.அந்தத் தொகை வழங்கப்பட்டால் அரசியல் தலைமைகள் இதனை வெற்றியாக கொண்டாடுவார்கள்.அந்த ஆயிரம் ரூபாயினை தற்போது வழங்கினால் அது 300 வை விட பெறுமதி அற்றதாகவே உள்ளது. ஆனால் அதை தாங்கள் ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொடுத்ததாக அரசியல் தலைவர்கள் கொண்டாடுவார்கள் இதுவே காலாகாலமாக நடந்துள்ளது. எனவே குறைந்தபட்ச சம்பளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு தொழிலாளர் உரிமை சாசனம் அரசியலமைப்பு ரீதியாக கொண்டுவர வேண்டும் அல்லது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது இங்கு முக்கியமானது. இதுவே அந்த மக்களிடையே அச்சாணியாக உள்ளது.அங்கிருந்து தான் அவர்களுடைய மரியாதை, கண்ணியம் சுயமரியாதை, நலவாழ்வு, பிள்ளைகளுடைய எதிர்காலம் அந்த மக்களுடைய அடுத்த கட்ட வாழ்வு எல்லாவற்றிலும் இந்த சம்பளம் கலந்துள்ளது. எனவே தொழிலாளர் உரிமைகள் இங்கு வென்றெடுக்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் புதிய அரசியலமைப்பு யோசனைகள் குறித்து அரசினால் பேசப்பட்டாலும் அவை இன்று வரை சாத்தியப்படவில்லை. எனினும் மலையக மக்களுக்கான உரிமைகள் முன்வைக்கப்பட்டாலும் இங்கு ஒரு சிலருடைய கேள்வி என்னவென்றால் மக்களின் பிரச்சினைகளை அரசியலமைப்பு ஒன்றின் மூலம் மாத்திரம் தீர்க்க முடியுமா என்பது தான்.

இந்த நாட்டில் சுதந்திரத்துக்கு பிறகு இந்திய வம்சாவளி மலையக சமூகத்துக்கு அனைத்துமே காலம் தாமதத்தே வழங்கப்பட்டுள்ளது. சுமார் 40 வருட கால நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தையும், அமைச்சுப் பதவிகளையும் கொண்டிருந்த இந்த சமூகத்துக்குரிய உரிமைகளையும் ஏனைய சலுகைகளை பெற்றுத் தர இந்த மக்களின் பிரதிநிதிகள் தவறிவிட்டதை கூற முடிகின்றது.அதாவது மலையக மக்களுக்கு தெரியாமலேயே இன்று பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அதில் இந்த புதிய அரசியலமைப்பு சீர்திருத்த கோரிக்கையும் உள்ளடங்குகின்றன. தனித்து இயங்குவோம் என்ற மலையக அரசியலின் சுயநலப் போக்கு எப்போது ஒழிக்கப்படுகின்றதோ அன்று தான் இந்த மக்களுக்கான விடிவு காலம் பிறக்கும். அவர்களுக்கான காணி உரிமை, இன உரிமை, முகவரி உரிமை ,தொழில் உரிமை ,சம்பள உரிமை, வீட்டு உரிமை முதலிய அனைத்தும் இந்த அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டு சட்டமாக இயற்றப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். இதன் மூலம் மலையக மக்களின் இருள் சூழ்ந்த வாழ்க்கையில் ஒளி படரும்.








# அடியார்களை சோதித்த காட்டுப்பாதை!

## காட்டுக்குள் 10 ஆயிரம் அடியார்கள்!

வரலாற்று பிரசித்தி பெற்ற பாரம்பரிய கதிர்காமம் பாதயாத்திரைக்கான காட்டுப் பாதை இம் முறை அடியார்களுக்கு பலத்த சோதனைகளை ஏற்படுத்தியது.

இது முருகனின் சோதனைகளாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பக்தியுடன் பாராயணம் செய்து முருக சிந்தனையுடன் ஆசாரபூர்வமாக பயணிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் அவற்றை மீறிவருகிறோம் என்பதற்காக வரலாறு காணாத இந்த சோதனைகள் கட்டியம் கூறுகின்றன என்று கருதப்படுகிறது.

காட்டுப்பாதை திறக்கப்பட்டு நேற்றுடன் 8 நாட்களாகின்றன.

பாதை திறக்கப்பட்ட கடந்த வெள்ளிக்கிழமை(22) தொடக்கம் இன்று வரை பயணித்த பாதயாத்திரீகர்கள் இம்முறை பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

கடும் வெயில் கடும் மழை இடையில் காட்டாற்று வெள்ளம் வீதிகள் சேறும் சகதியும் நிற்கத்தரிக்க இடமில்லாமல் அடியார்கள் பட்ட கஷ்டம் அதிகம்.

பாதயாத்திரை புனிதமாக மாற வேண்டும் என்பதை இந்த சோதனைகள் நிறைசீராக எடுத்துக் கொண்டு இதைமீளக் கட்டமைக்க சம்பந்தப்பட்ட அனைவரும் முன்வர வேண்டும் .

குறிப்பாக கதிர்காம பாதயாத்திரை வருத்தமானிப்



பிரகடனம் செய்யப்பட வேண்டும். பல நிபந்தனைகளோடு பாரம்பரிய உணர்வுகளோடு இடம் பெற வேண்டும்.

இம் முறை சோதனை அதற்கு கட்டியும் கூறி இருக்கின்றது. கண்ணியமாகவும் ஆசாரமாகவும் இருக்க வேண்டும் என்றும் பலரும் தெரிவித்தார்கள்.

2000 ஆண்டுகளுக்கு முன்பு அகஸ்தியர் புலஸ்தியர் போகர் உங்க பல சித்தர்கள் முனிவர்களால் மேற்கொள்ளப்பட்ட பாதயாத்திரை இன்று பல ஆயிரக்கணக்கான மக்களால் தொடரப்பட்டு வருகின்றது.

இந்துக்கள் மாத்திரம் இல்லாமல் பௌத்தர்கள் வெளிநாட்டவர்கள் என்று பலரும் பங்கேற்கின்றார்கள்.

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை கடந்த(22) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

வரலாறு காணாத வகையில் இம்முறை 6000 க்கு மேற்பட்ட அடியார்கள் முதல் தடவையாக முதல் நாளிலேயே காட்டுக்குள் பிரவேசித்துள்ளனர்.

முதல் தடவையாக இந்து சமய கலாசார முறைப்படி கழுகுமலை பத்து பாடி திறந்து வைக்கப்பட்டது.

கொரோனா காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக காட்டுப் பாதை திறக்கப்படவில்லை என்பது தெரிந்ததே.

அன்று அதி காலை 5.30 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடாத்தி ஆசியுரை வழங்கினார்.

காலை 7 மணியளவில் குமண சரணாலய நுழைவாயிலில் காட்டுப் பாதை சம்பிரதாய பூர்வமாக திறக்கப்பட்டது.

அவ்வமயம் , அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், லாகுகலை



பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா ,மொனராகலை மாவட்ட மேலதிக அரசாங்கஅதிபர் ,ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க , கிழக்கு கலாச்சார பணிப்பாளர் ச.நவநீதன்,காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் இந்து சமய செயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜா கிழக்கு மாகாண கலாச்சார பணிப்பாளர் ச.நவநீதன் உள்ளிட்ட பல அன்பர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரனின் ஆலோசனைக்கமைவாக மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜியின் ஏற்பாட்டில் கழுகுமலை



பத்து பாடி காட்டுப் பாதை திறந்துவைக்கப்பட்டது.

முதல் நாளிலேயே சுமார் 6000 பாதயாத்திரீகர்கள் பயணி த்லமை இதுவே முதல் முறையாகும்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த சி.ஜெயராசா தலைமையிலான 56 நாள் மிகநீண்ட பாதயாத்திரை அடியார்கள் உள்ளிட்ட 6 ஆயிரம் அடியார்கள் கலந்து கொண்டார்கள்.

கதிர்காம காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் ஆகும்.

உகந்தையிலிருந்து ஐந்து மைல்தூரத்தில் வாகூரவட்டை .பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு. 12 மைல் தூரத்தில் நாவலடி. பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை. 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு. 8 மைல் தூரத்தில் கட்டகாமம். அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம் மொத்தமாக காட்டுப்பாதை 56 மைல்களை

உள்ளடக்கியது . சுமார் 6 நாட்கள் இந்த காட்டுப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை.

கடந்த 22 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்ட காட்டுப் பாதை ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் தேதி மூடப்படுகிறது.

கதிர்காம கொடியேற்றம் நேற்று29 ஆம் திகதி நடைபெற்றது. ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி தீர்த்தம் இடம் பெறும் .

கதிர்காமப் பாதயாத்திரை அகத்திய முனிவர் தொடக்கி அருணகிரியார் ஈறாகவும், யோகர் சுவாமி முதற்கொண்டு சித்தானைக்குட்டி வரை எண்ணி



றைந்த சித்தர் பெருமக்கள் இன்றுவரை தம் பாதக் கமலங்களை பதித்து பவனி சென்ற பாதையில் வருடாவருடம் நாமும் பயணிக்கின்றோம்.

'ஷேத்திராடனம்' எனும் நூலில் கூறப்பட்டுள்ளன.

அத்தகைய வரலாறு கூறும் பாதயாத்திரை இம்முறை இரண்டு வருடங்களுக்கு பிறகு சிறப்பாக நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

### பாரிய சோதனை- காட்டாற்று வெள்ளம்

ஆயிரக்கணக்கான கதிர்காம பாதயாத்திரை அடியார்கள் உறங்கி கொண்டிருந்த வேளையில் திடீரென ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்தால் அடியார்கள் அல்லோலகல்லோலப்பட்டார்கள்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

பாரம்பரிய பாதயாத்திரை வரலாற்றில் இப்படி நடந்தது இதுவே முதல் தடவையாகும்.

விடிய விடிய மழை பொழிந்து கொண்டிருந்தது.

காட்டாற்று வெள்ளத்தால் திடீரென வியாழை ஆற்றின் நீர் மட்டம் 5 அடி வரை உயர்வடைந்தது.

இதனால் அடியார்கள் திக்குமுக்காட அரோகரா கோசம் விண்ணைப்பிளந்தது.

அடியார்கள் உயிரைக் கையில் பிடித்தபடி காட்டுக்குள் ஓடினர்.

ஆனால் அவர்களது உடைமைகளை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

அவர்களது உடுப்பு பைகள் உணவுப் பொதிகள் ரார் போலின் அனைத்தும் வெள்ளத்தில் அள்ளுண்டன.

அருகில் உள்ள வள்ளி அம்மன் ஆற்றில் நின்ற அடியார்களுக்கு இராணுவம் முன்னதாக அறிவித்தது.

ஆனால் ஆயிரக்கணக்கான அடியார்கள் தங்கியிருந்த வியாழையில் எந்த அறிவித்ததும் இல்லை. அதுவே நள்ளிரவு அவலத்திற்கு காரணம் என்று பாதயாத்திரை அடியார் மு.காண்டீபன்( காரைதீவு) கூறினார்.

அடியார்கள் பெரும் பீதிக்குள்ளானார்கள்.

### குடிநீர் விநியோகம்

கதிர்காமத்துக்கான காட்டுப்பாதையில் பயணிக்கும் அடியார்களுக்கு ,குமுக்கனிலிருந்து வியாழ வரைக்குமான 11 மைல் தூர பிரதேசத்தில் சீரான குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ள தம்பிலுவில் சிவதொண்டர் அமைப்பு சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

அமைப்பின் ஆலோசகர் முத்துலிங்கம் கருணாநிதி தெரிவிக்கையில்;

'வழமையாக ஆறு வவுசர்கள் நீர்த்தாங்கிளுடன் இந்த பணியை மேற்கொள்வோம். இம்முறை 8 பவுசர்கள் நீர் தாங்கிகளோடு இந்த பணி மேற்கொள்ளப்படவிருக்கின்றது .

தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபை மற்றும் சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளோடு இந்த நீர் குமுக்கன் ஆற்றில் எடுக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு அடியார்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படவிருக்கிறது' என்றார்.

இதேவேளை, தம்பிலுவில் சிவ தொண்டர் நிலையம் அதன் தலைவர் எஸ். கேதீஸ்வரன் தலைமையிலே நாவலடி என்கின்ற இடத்தில் 25ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக பகலில் அன்னதானம் வழங்கிவருகிறது.

மட்டக்களப்பு மாநகர சபையினரும் அங்கு அன்னதானம் வழங்கி வருகிறது.

இதேவேளை, நாவலடியிலிருந்து கதிர்காமம் வரைக்கும் செல்லும் யாத்திரிகர்களின் நலன் கருதி அவர்களுக்கான அரிசி மற்றும் மரக்கறிகளை வழங்கவும் ஏற்பாடு செய்திருப்பதாக சிவ தொண்டர் அமைப்பின் ஆலோசகர் கருணாநிதி மேலும் தெரிவித்தார்.

மலையகபகுதியில் பெய்த மழை காரணமாக குமுக்கன் ஆற்றில் 5 அடி நீர் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.



கிழக்கு மாகாணத்தையும் ஊவா மாகாணத்தையும் பிரிப்பது இந்த குமுக்கன் ஆறு என்பது குறிப்பிடத்தக்கது.

### பெரும் மழை

இம்முறை கானகத்தில் கனமழை பொழிந்து வருகிறது. அதனால் அடியார்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பாதைகளும் சேறும் சகதியுமாக காணப்பட்டன.

காட்டுப் பாதை திறக்கப்பட்டதும் பிரவேசித்த சுமார் 6 ஆயிரம் அடியார்கள் புதனன்று கதிர்காமத்தை சென்றடைந்தார்கள்.

தற்போது கூட கதிர்காமத்தை சென்றடைந்து கொண்டிருக்கிறார்கள்.





உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)

# புதிய அரசியலமைப்பில் சிறுபான்மை சமூகத்தின் காப்பீடுகள் மற்றும் உரிமைகள்!



**(ஊடக விளங்கறிவு மையம் (Cmil) நடாத்திய Reform watch நிகழ்ச்சியின் Expert talk இல் சமூக செயற்பாட்டாளர் இஸ்ஸத் இன்ஹாம் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு)**





அப்ரா அன்ஸார்

சிறுபான்மையினர் ஒரு நாட்டின் இன, மொழி, பண்பாட்டு அடிப்படையில் குறைந்த எண்ணிக்கையிலோ , விகிதாசார அடிப்படையிலோ குறைந்த அளவில் வாழ்பவர்களாகும்.உலகின் பெரும்பாலான நாடுகளில் சிறுபான்மையினர் வாழ்ந்து வருகின்றனர்.வெகுசில நாடுகளே தங்கள் நாட்டில் ஒரே இனத்தை, பண்பாட்டை, மொழியைப் பாவிக்கின்ற மக்களை கொண்டுள்ளன.சிறுபான்மையினர் பூர்வகுடிகளாகவோ , குடிபெயர்ந்தோராக இருக்க முடிகின்றது.எண்ணிக்கையில் சிறுபான்மையினராய் இருந்தாலும் அவர்கள் தங்கள் வாழும் பகுதியின் குடிமக்கள் என்பதால் பல நாடுகள் இவர்களுக்கு சம உரிமையை வழங்கியுள்ளன.மேலும் சில நாடுகள் அவர்களை ஒடுக்குகின்றனர்.இலங்கையைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களும், தமிழர்களும் பிரதான சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர்.உலக சிறுபான்மையினர் தினம் வருடா வருடம் டிசம்பர் 18 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.எனினும் உண்மையிலே இவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளதா என்ற என்ற கேள்வியை எழுப்பினால் அதற்கு சீக்கிரம் விடை கிடைக்காது என்பதே உண்மை.

டொனமூர் யாப்பு ஜனநாயக பாரம்பரியங்களை இலங்கையில் நிலைபெற செய்யக் கூடியதாக இருந்தாலும் தேசாதிபதியினதும் அரசாங்க ஊழியர்களினதும் அதிகாரமும் அவர்கள் செயற்பட்ட விதமும் காரணமாக இந்த யாப்பு நடைமுறைக்கு வந்த காலகட்டத்திலிருந்தே இலங்கையரது எதிர்ப்பினை பெற்று வந்தது. இதனால் இரண்டாம் உலகப் போர் ஆரம்பமான வேளையில் இலங்கை பிரதிநிதிகள் இச் சந்தர்ப்பத்தை தமக்கு சாதகமாக்கி பிரித்தானியருக்கு பிரதிநிதிகள் இச் சந்தர்ப்பத்தை தமக்கு சாதகமாக்கி பிரித்தானியருக்கு எதிராக அரசியல் சீர்திருத்த கோரிக்கைகளை முன் வைத்தனர். இதனடிப்படையில் பல முன்னெடுப்புகளை முன்னெடுத்து தோல்வியில் முடிந்தாலும் பின்னர் சோல்பரி பிரபு தலைமையில் ஓர் குழுவினர் இலங்கை வந்து விசாரணைகளை நடத்தி 1945ல் ஓர் யாப்பு ஒன்றினை வரைந்து 1947 இல் நடைமுறைப்படுத்தினர். இதுவே சோல்பரி அரசியல் யாப்பாகும்.

இந்த யாப்பினை மனித உரிமைகளோடு இணைத்து பார்க்கும் போது சோல்பரி அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயம் இடம்பெறவில்லை. எனினும் 29(2) உறுப்புரை சேர்க்கப்பட்டது.இது சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக இருக்கும் என்றும் அவர்களுடைய உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் என்றும் கூறப்பட்டு யாப்பில் உள்வாங்கப்பட்டிருந்தது. ஆனால் இது நடைமுறையில் வெறும் கானல் நீராகவே போயுள்ளது.சிறுபான்மையினர் காப்பீடு மட்டுமன்றி இன்னும் பல ஏற்பாடுகளும் இதில் இடம்பெற்றுள்ளது.ஆனாலும் அவை ஒவ்வொன்றும் நடைமுறையில் செயற்பட்ட விதம் பற்றி நோக்கும் போது பயனளிக்காத ஒன்றாகவே அடையாளம் காணப்பட்டுள்ளது.1972 ஆம் ஆண்டு மற்றும் 1978 ஆம் ஆண்டுடைய முதலாம் இரண்டாம் குடியரசு யாப்புகளில் உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் உள்வாங்க சோல்பரி திட்டத்தில் இடம்பெற்ற சிறுபான்மையினர் காப்பீடு முன்னோட்டமாக காணப்பட்டதாகும்.சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாக்க செய்யப்பட்ட காப்பீடுகள் சோல்பரி அரசியல் திட்டத்தில் இருந்தாலும் அவற்றை உரிமைகள் என்று ஏற்றுக் கொள்ள முடியாது.அது காப்பீடுகள் மாத்திரமே.மேலும் அவற்றின் நடைமுறைப் பயன்பாட்டினையும் நோக்கும் போது அவற்றினால் எந்த வித நன்மைகளையும் சுதேசிய மக்கள் பெறவில்லை என்பது தெளிவாகியுள்ளது.சோல்பரி காப்பீடுகளாக பிரதிநிதிகள் தொகை அதிகரிக்கப்பட்டமை அதாவது டொனமூர் திட்டத்தில் சட்டசபை உறுப்பினர்கள் 61 பேர் காணப்பட்டதானது சோல்பரி திட்டத்தில் 101 ஆக அதிகரிக்கப்பட்டது.இரட்டை அங்கத்தவர் தொகுதி காணப்பட்டமை , மகாதேசாதிபதியால் 6 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டமை ,அரச சேவை ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டமை, மகாதேசாதிபதிக்கு சில விசேட சிறப்புரிமைகள் வழங்கப்பட்டமை, முக்கியமான விடயமாகவும் , நடைமுறையில் ஓர் அளவில் பயன்பாடுகளையும் மற்றும் சோல்பரி திட்டத்தில் முதன்மை விடயமாகவும் பாராளுமன்றத்தின் இறைமையினை கட்டுப்படுத்திய ஓர் அம்சமாக காணப்பட்டது யாப்பின் 29 ஆவது பிரிவாகும்.இத்தகைய விடயங்களை உள்ளடக்கியதாக சோல்பரி திட்ட காப்பீடுகள் அமைந்தன.பிற்பட்ட அரசியல் யாப்புகளிலே சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட்டது போன்று சோல்பரி யாப்பில் இடம்பெற்ற உரிமைகள் பற்றி மிகக் குறைந்த மட்டுப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளாகவே உள்ளது.

சோல்பரி அரசியல் திட்டத்தில் சிறுபான்மையினர் நலன் பேணும் ஏற்பாடுகளில் பிரதான ஏற்பாடாக 29 ஆவது பிரிவு காணப்படுகின்றது. இதன்படி ஓர் இனத்தையோ அல்லது சமூகத்தையோ பாதிக்கக்கூடிய எந்த சட்டங்களையும் பாராளுமன்றம் இயற்றக்கூடாது என விதித்தது. பாராளுமன்றத்தின் இரைமையினை கட்டுப்படுத்தும் ஒரு அம்சமாகவும் இதனை பார்க்க முடியும். எந்த மத சமூகப் பிரிவினர்களினதும் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு இடையூறுகளை விளைவிக்கக் கூடிய சட்டங்கள் எதையும் இயற்றக்கூடாது, பிற சமூக பிரிவு மக்களுக்கு வழங்கப்படாத ஒன்று வேறு எந்த சமூக பிரிவு மக்களுக்கும் வழங்கக் கூடாது, பிற மதப் பிரிவு மக்களுக்கு விதிக்கப்படாத தடைகளை வேறு எந்த சமூக பிரிவு மக்களுக்கும் விதிக்க கூடாது, அரசியல் யாப்பில் மத சம்பந்தமான சட்ட விதிகளை திருத்துவதாக அல்லது மாற்றியமைப்பதாக இருந்தால் அந்த மதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தலைவர்களின் ஆலோசனையை பெற்ற பின்பே மாற்ற வேண்டும். இத்தகைய விதிகள் அனைத்தும் சிறுபான்மையினரினை பாதிக்கும் இன,மத வேறுபாடுகள் பாரபட்சங்களை தடை செய்வதாக அமைந்தது. அதனால் இவ் ஏற்பாடு பிரதானமான ஏற்பாடாக கருதப்பட்ட போதும் நடைமுறையில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக அமையவில்லை.இவ் ஏற்பாடு நடைமுறையில் இருக்கும் போதே சிறுபான்மை இனத்திற்கு எதிரான பல சட்டங்கள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டன. அதாவது 1948 பிரஜா உரிமைச் சட்டம், 1949 பாராளுமன்ற தேர்தல் திருத்தச் சட்டம் ,1956 தனிச் சிங்கள மொழிச் சட்டம், 1967 சிறிமா சாஸ்திரி ஒப்பந்த அமுலாக்கச் சட்டம் போன்ற பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட இந்த 29 ஆவது உருப்புரையினால் எதனையும் தடுக்க முடியாது போனது. இவ்வாறு சிறுபான்மையினர் நலன் நலன் பாதிக்கப்படும் சட்டங்கள் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டால் அவற்றுக்கு சிறுபான்மையினர்கள் நலன்களை காரணம் காட்டி மகாதேசாதிபதி இறுதி கையொப்பமிட மறுக்கலாம் ஆனால் நடைமுறையில் இவருமே மேற்கூறப்பட்ட சிறுபான்மையினருக்கு எதிரான சட்டங்கள் அனைத்திற்கும் இறுதி ஒப்பமிட்டு சட்டமாக அங்கீகரித்தார். பிரஜா உரிமை சட்டம் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் சட்டம் என்பன சுதந்திர இலங்கையில் சுதேசிகளால் 1820 களிலிருந்து பெருந்தோட்ட தொழில்களை செய்வதற்காக தென்னிந்தியாவிலிருந்து வந்த குடியமர்ந்த இந்திய தமிழ் மக்களை வெகுவாக பாதிப்பதாக அமைந்தது. 1987 ஆம் ஆண்டு வரை அம்மக்கள் பாதிப்படையை இச் சட்டமே காரணமாக அமைந்தது. அடுத்த தனிச் சிங்கள மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டமையால் இலங்கை வாழ்பூர்வீக தமிழர்கள் பாதிப்புற்று இன்றுவரையான இன முரண்பாட்டுக்கு அது காரணியாக அமைந்துள்ளது.



தற்போது புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் காப்பீடுகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பது பிரதானமானது. இலங்கையை பொறுத்தவரை இது பல்லின சமூகத்தவர்கள் வாழக்கூடிய நாடாக உள்ளது. எனவே இங்கு பல்லின சமூகங்களுக்கும் சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே தவிர சிறுபான்மையினர் என்று பிரித்து அவர்களுக்கு என்று தனியான உரிமைகள் வழங்கப்படுவது பொருத்தமற்றது. சிறுபான்மை காப்பீடு என்பது சோல்பறியாப்பில் கொண்டுவரப்பட்டது. அங்கு மாத்திரம் தான் சிறுபான்மை என்று குறிப்பிடப்படுகின்றது. அதன் பின்னர் 1972 ஆம் ஆண்டு சிறுபான்மை காப்பீடு என்ற விடயம் அடிப்படை உரிமைகளாக மாற்றப்படுகின்றது. எனினும் அதனை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்ற வழிமுறைகள் உள்வாங்கப்படவில்லை என்பதை உண்மை 1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தினாலே போதுமாகின்றது. தற்போதைய சீர்திருத்தங்கள் தேவையில்லை. ஏனெனில் 1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சீர்திருத்தம் மிக வலுவான ஒரு சீர்திருத்தமாகவும் தற்போதுள்ள இருபதாவது சீர்திருத்தமானது சிறுபான்மையினுக்கு மாத்திரம் அல்ல அனைத்து மக்களுக்கும் அது பயங்கரமாக உள்ளது .நாட்டின் பிரதான துறைகளானது சுயாதீனமாய் இயங்க வேண்டும். ஆனால் இங்கு ஜனாதிபதிக்கு மாத்திரமே அனைத்து பலத்தையும் வழங்கியுள்ளது. அதாவது சட்டத்துறையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கொலையாளி ஜனாதிபதியின் பொதுமனிப்பின் கீழ் விடுதலை ஆகினார். இங்க ஜனாதிபதி நீதித்துறையில் நேரடியாக தலையீடு செய்கின்றார். இதைத்தான் தடைகள் சமன்பாட்டு முறை என்கின்றோம். எனவே இங்கு பிரதான துறைகள் தனித்தனியாக காணப்பட வேண்டும். தேவைக்கு ஒன்றினைந்து செயல்பட வேண்டும். மாறாக இங்கு தலையீடு இருக்கக் கூடாது.



சிறுபான்மையினருடன் தொடர்புடைய தனியார் சட்டங்களை பொருத்தவரை அதிலும் குறிப்பாக முஸ்லிம் தனியார் சட்டங்களில் பாரிய பிரச்சினைகள் கடந்த காலங்களில் பேசப்பட்டது .இவற்றினை நிவர்த்தி செய்து கொள்ள அரசியல் ரீதியான முன்னேற்பாடுகள் போதாமையே காரணமாக உள்ளது. வல்லுனர்கள் இருந்தாலும் அரசியல் ரீதியாக அதனை நடைமுறைப்படுத்துவதில் தான் அதிக பாரதூரம் இருக்கின்றது. மொழி பிரச்சினையை பொறுத்தவரையில் அது சிறுபான்மையினருக்கு பாரிய பிரச்சினையாக உள்ளது. தமிழ் மொழி, சிங்கள மொழி என்பன அரச கரும மொழியாக இருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு பாரிய சிக்கல் உள்ளது. 1956 காலப்பகுதியில் எவ்வாறு மொழிப்பிரச்சினை பரவலாக இருந்ததோ அதேபோன்று தற்போது சட்டம் நடைமுறையில் இருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளது. சோல்பரி யாப்பானது சிறுபான்மையினரின் உரிமையை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது. மூன்றில் இரண்டு பெரும் பான்மையைக் கொண்டு யாப்பினை திருத்து அமைக்க முடியும் ஆனால் இரண்டாவது சரத்திலே மாற்ற முடியாது ஏனெனில் அதிலே சிறுபான்மை காப்பீடு குறிப்பிடப்படுகின்றது. எனவே இன்று வரை எழுத்து மூலம் இருக்கின்றதே தவிர அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதே பாரிய குறைபாடாக உள்ளது. எனவே இதனை தான் அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்னும் அகதிகளாக வாழக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். புத்தளத்தில் அகதிகளாக குடிப்பெயர்வு, பொத்துவில் காணி பிரச்சினை, வடகிழக்கிலே காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளது, எனவே இவற்றுக்கான சரியான தீர்வினை இன்று வரை அரசியல்வாதிகளினால் பெற்றுக் கொடுக்கப்படவில்லை எனவே இங்கு முழுமையாக பாதிக்கப்பட்டு இருப்பது சிறுபான்மையினர் தான். எனவே இவர்களுக்கான சரியான தீர்வு அரசியலமைப்பின் ஊடாக வரவேண்டும் என்பதை அனைவரினதும் கோரிக்கையாக உள்ளது.



# வளமான நாடு வங்குரோத்து நாடானது எப்படி?

## (1948 - ௨0௨௨ காலம் வரையிலான ஒரு பார்வை)

இயற்கையாகவே எமது நாடானது பலவளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.நீர்வளம்,நிலவளம், கடல் வளம்,கனியவளம்,வனவளம், மலைவளம், இயற்கைத் துறைமுகம்,மனிதவளம் என்று இன்னும் பல வளங்களை எமது நாடு கொண்டுள்ளது. இப்படியான அழகான தீவு,தீர்வு இல்லாமல் இன்று வங்குரோத்துப் பொருளாதாரத்தினை அடைந்துள்ளது. இதற்கான காரணங்கள் எவை என்பதை நாம் அறிய வேண்டும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டான 1948 இல் இருந்து இன்றுவரை எமது நாட்டை ஆட்சி செய்த சிங்களத் தலைவர்கள் அன்றில் இருந்து இன்றுவரை செய்த பாரிய தப்புகள் தவறுகளால் எமது நாடு அபிவிருத்தி அடையாமல் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது.மக்களின் மத்தியில் தேசிய ஐக்கியத்தினை ஏற்படுத்தாமல் மாறாக இனவாதம்,மதவாதம் சார்ந்த அடிப்படைவாத அரசியலை மேற்கொண்டதுடன் ஊழல் மோசடிகள்,வீண்விரயங்கள்,தப்பான பொருளாதாரர முகாமைத்துவங்களால் எமது நாடு சீரழிக்கப்பட்டு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எமது நாடு சுதந்திரம் அடைந்தபோது பொருளாதார நிலையைப் பொறுத்தமட்டில் ஆசியாவில் மூன்றாவது இடத்தில் காணப்பட்டது.சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்யூ அவர்களே எமது நாட்டைப்பார்த்து ஆச்சரியப்பட்டு ஆசைப்பட்டு இலங்கையைப்போல் சிங்கப்பூரை ஆக்கப்போவதாகக் கூறினார்.அப்படியான நிலையில் இருந்த எமது பல்லின மக்களைக் கொண்ட தாய்நாட்டில் சிங்களத்தலைவர்கள்,இனவாத மதவாத அடிப்படையில் தமிழ் மக்களை ஒதுக்கவும் ஒடுக்கவும் கூடிய விதத்தில் சட்ட திட்டங்களை காலத்திற்குக் காலம் கொண்டு வந்தனர்.

ஒற்றுமையான வழியில் நாட்டை அபிவிருத்தி செய்யாமல் சிங்களவர் தமிழர் என்றவகையில் மனிதவளத்தைக் கூறுபோட்டு எதிரும் புதிருமாக்கி பகைமையை உருவாக்கினார்கள் ஆட்சியாளர்கள்.தமிழர்களை ஒடுக்குவதற்காக நாட்டினால் பராமரிக்க முடியாதளவு படை எண்ணிக்கையினை மூன்று இலட்சத்திற்கும் அதிகமானளவில் அதிகரித்தனர்.வன்முறைகள்,மனித அழிப்புகள் மூலமாக தமிழ்ப் புத்தியாளர்கள்,தொழிலதிபர்களை நாட்டைவிட்டு வெருட்டும் வகையில் நடந்து கொண்டனர்.உற்பத்தியின் பங்காளர்களாக இருக்க வேண்டிய தமிழ் இளைஞர்களை எதிரிகளாக்கி ஆயுதம் ஏந்தும் நிலைக்கு ஆட்சியாளர்கள் நெருக்குதல்களை மேற்கொண்டனர்.இனவாத மதவாத ஆட்சியாளர்கள் காலத்துக்குக் காலம் என்ன செய்தார்கள் என்பதைப் பார்ப்போம்.

அந்த வகையில்,1947 பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றதன் அடிப்படையில்,ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் பிரதமரானார் டி.எஸ்.சேனநாயக்க.அவர் இலங்கையில் தமிழ் மக்களின் எண்ணிக்கை,அவர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் என்பவற்றைக் குறைக்கக்கூடிய விதத்தில் 1948,1949 களில் பிரஜாவுரிமைச்சட்டம்,வாக்குரிமைச் சட்டம் என்பவற்றைக் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி இந்திய வம்சாவழித் தமிழ்த் தோட்ட தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமையைப் பறித்து 5 இலட்சம் மக்களை நாடற்ற பிரசைகளாக்கினார். இதனால் 30 ஆண்டுகள் அந்த மக்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்டனர். தொழில் அடிமைகளாக்கப்பட்டனர். 1947 தேர்தலின் மூலமாக,இந்திய வம்சாவழி மக்கள் சார்பாக 7 பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் காணப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.தேயிலை இறப்பர் தோட்டங்களில் நாட்டுக்காக உழைத்து பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பிய மக்களைப் பாராட்டி அவர்களது உரிமைகளை வழங்குவதை விடுத்து,அவர்களை நாடற்ற அநாதைகளாக்கியமை இலங்கையின் பொருளாதார சாபக்கேட்டுக்கான ஆரம்பமாகிற்று.

1956 இல் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி அரசாங்கம் தனிச்சிங்கள அரச கரும மொழிச்சட்டத்தினை 24 மணித்தியாலத்தினுள் நிறைவேற்றி தமிழையும் தமிழர்களையும் முற்றாகப் புறக்கணித்தது.தனிச்சிங்கள நாடாக இலங்கையைக் காண்பிக்க பண்டாரநாயக்க முற்பட்டார். இதன் மூலமாக சிங்கள இனவாதத்தின் பிதாமகராகத் தன்னை வெளிக்காட்டினார்.மேலும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறி பண்டா-செல்வா ஒப்பந்தத்தினை மேற்கொண்டு நிறைவேற்றாமல் கிழித்து வீசினார்.அதையும் விட கேவலமான இனவன்முறை ஒன்று இவரது ஆட்சிக்காலத்தில் 1958 இல் நடைபெற்றது.அதாவது தென் பகுதியில் வாழ்ந்த தமிழர்களையும் அவர்களது சொத்துக்களையும் குறிவைத்து இந்த இனவாதக் கொடுமை அரங்கேறியது.300 தமிழர்கள் வதைத்துக் கொல்லப்பட்டனர்.அவர்களது சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன.எரித்து நாசமாக்கப்பட்டன.அதன் நோக்கம் என்னவென்றால் தமிழ் மக்களின் வணிகத்தைத் தென்பகுதியில் இருந்து அகற்றுதல்,தமிழர்களை அச்சுறுத்தி வெளிநாடுகளுக்குத்துரத்துதல்,வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் தமிழர்களை முடக்குதல் என்பவையாக அமைந்தன. எப்படியோ தமிழர்களின் சமூக,பொருளாதார,அரசியல் பலத்தினை இல்லாமல் ஆக்குவதே பண்டாவினது சிங்கள இனவாதத்தின் இலக்காக இருந்தது.

அடுத்து ஆட்சிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டார நாயக்க,ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் மூலமாக இந்திய வம்சாவழித் தமிழர்களை இந்தியாவுக்கு அனுப்புவதில் குறியாக இருந்தார். இதனாலும் 5 இலட்சம் தமிழர்கள் வரை இலங்கையை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது.இதன் மூலமாக நாட்டைக் கட்டியெழுப்பிய தொழிலாளர் வளங்கள் கணிசமாக அகற்றப்பட்டன.

டட்லி சேனநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் டட்லி -செல்வா ஒப்பந்தம் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக 1965 இல் மேற்கொள்ளப்பட்டது.அதுவும் பின்னர் கைவிடப்பட்டது.சிங்களத்தலைவர்களில் ஓரளவு கனவானாக மதிக்கப்பட்ட டட்லியும்கூட இனப்பரச்சினையைத் தீர்ப்பதில் கரிசனை கொள்ளவில்லை என்பதை அறிய முடிகின்றது.

மேலும் 1970 இல் ஆட்சிக்கு வந்த ஸ்ரீமாவோ,அரசியல் யாப்பு ரீதியாக 1972 இல் சிங்கள மொழியினை அரச கரும மொழியாக்கியதுடன் மட்டுமல்லாமல் பௌத்த மதத்தினை அரச மதமாக்கினார். பல்லினமக்கள் கொண்ட நாட்டினை சிங்கள பௌத்த நாடாகக் காட்டிக் கொள்ள முழுமையாக 'ரீமா அம்மையார் முயற்சித்தார்.முற்போக்கான வழியில் இன,மத,மொழி சார்பற்ற அரசியல்யாப்பினை உருவாக்க அம்மையார் நினைக்கவில்லை.மேலும் பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களைப் பாதிக்கக்கூடிய தரப்படுத்தல் முறை,வடக்கு கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்,மக்களை ஆட்கள், பிரசைகள் என வகைப்படுத்தியமை போன்ற இவ்வாறான பாரபட்சமான செயற்பாடுகள் மூலமாகத் தமிழ் மக்கள் மேலும் ஓரங்கட்டப்பட்டனர்.

இவற்றை விட தமிழர்களுக்கு எதிரான 1958,1970,1977,1983 இனவக்கிர வன்முறைக் கலவரங்களால் பல இலட்சக்கணக்கான தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

உரிமை மறுக்கப்பட்ட தமிழர்கள் 30 ஆண்டுகளாக அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டும் தீர்வு கிடையாததால்,தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கிப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.1976 களின் இருந்து தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் படிப்படியாக வளர்ச்சி கண்டது. 1983 கறுப்பு யூலைக் கலவரத்தில் 3000 தமிழர்கள் நாடு பூராகவும் குண்டர்களால் கொல்லப்பட்டனர்.பல கோடிக்கணக்கான தமிழர்களின் சொத்துகள் அழிக்கப்பட்டன.தமிழர்கள் அப்பாவிகளாக வாழ்வதற்கும் சிங்கள இனவாதம் இடமளிக்கவில்லை.


முப்பதாண்டுகள் தமிழர்கள் ஏமாற்றப்பட்டதால்,தமிழ் இளைஞர்கள் கணிசமானவாகள் சிங்கள அடிப்படை வாத அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராட முற்பட்டனர். உள்நாட்டுப் போர் உக்கிரமடைய ஆரம்பித்தது. அநீதியான முறையில் அரசு நடந்து கொண்டதனால்தான் இந்த யுத்தம் ஏற்பட்டது என்பதை அரசு உணர மறுத்தது.அரசியல் தீர்வு மறுக்கப்பட்டதால் உருவான ஆயுதப்போராட்டத்தினை அரசியல் தீர்வு மூலம் நிறுத்தாமல்,அரசியல் தேவைக்காகவும் ஆட்சியாளர்களின் சுயநல உழைப்புக்காகவும் யுத்தத்தினைக் கையாண்டனர்.படைகளின் எண்ணிக்கை தேவைக்கு மாறாக அதிகரிக்கப்பட்டன.யுத்த தளபாடங்கள வகை தொகை இல்லாமல் கொள்வனவு செய்யப்பட்டன.கொள்வனவுகளில் மோசடிகள் பணவிரயங்கள் செய்யப்பட்டன.பாதுகாப்புக்காகப் பல்லாயிரக்கணக்கான் கோடிரூபாய்கள் விரயம் செய்யப்பட்டன,செய்யப்படுகின்றன.யுத்தமில்லாத நாட்டிலும்கூட பாதுகாப்புச் செலவீனம் என்ற போர்வையில் மக்களின் மூல்ம் பெறப்படும் வரிப்பணங்கள் வீண்விரயம் செய்யப்படுகின்றன.பாரியளவில் யுத்தத்திற்காக கடன்கள் பெறப்பட்டுள்ளன.அதிலும் கூட மோசடிகள் இடம்பெற்றுள்ளன்.

1977 தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பறறிய ஜெயவர்தனா அவர்கள் தமிழர்களையும் ஆயுதமேந்திய இளைஞர்களையும் ஒடுக்குவதற்காக அவசரகாலச்சட்டம்,பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பவற்றை பயன்படுத்தி படைபலத்தினை உச்சமாகப் பிரயோகித்தார்.பாரிய மனிதவுரிமை மீறல்களுக்கு வழிசமைத்தார்.1983 கறை படிந்த கறுப்பு யூலை வன்செயல்களும் ஜெயவர்தனாவின் ஆட்சிக்காலத்திலே நடந்தேறியது.அரச சிறைச்சாலையில் காணப்பட்ட 53 தமிழ்க்கைதிகள் கொடூரமாக வதைத்துக்கொல்லப்பட்டனர்.எந்த வன்முறைகளுக்கும் நீதி வழங்கப்படவில்லை.இக்காரணங்களால் வடக்கு கிழக்கில் இளைஞர்களின் ஆயுதப்போராட்டம் உத்வேகம் அடைந்தது.சிங்கள இனவாதிகளால் தமிழர்கள்,இளைஞர்கள் புலிகளாகவும் பயங்கரவாதிகளாகவம் பார்க்கப்பட்டனர்.அப்பாவித்தமிழர்கள் ஆயிரணக்கில் பயங்கரவாதச் சட்டத்தினால் பழிவாங்கப்பட்டனர்,பலியெடுக்கப்பட்டனர்.1988 இல் ஜனாதிபதியான பிறேமதாச அவர்களின் ஆட்சிக்காலத்திலும் ஜெயவர்தனாவின் ஆட்சிக்காலம் போன்றே அடக்கு முறை அழிப்புகள் தொடர்ந்தன. ஆயுதப்போராட்டமும் வலுவடைந்தது.தமிழர் மீதான அடக்கு முறைகளினால் ஆயுதம் ஏந்தவேண்ணடிய நிலைக்கு இனைஞர்கள் தள்ளப்பட்டார்கள்.ஏனைய இளைஞர்கள் பலர் ஆயிரக்கணக்கில் நாட்டைவிட்டு வெளியேறினர்.தமிழர்களின் பொருளாதார முயற்சிகள் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகள் இலங்கையில் முடங்கிப்போயின,முடக்கப்பட்டன.இதனாலும் தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறினர்.குறிப்பாகக் கறுப்பு யூலை தமிழர்களின் பொருளாதாரத்தை தென் பகுதியில் அழித்துவிட்டது. இதுவும்கூட நாட்டைப் பின்னோக்கித் தள்ளியது.உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல்,ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் யுவதிகள் ஆயுதங்களை ஏந்திப்போராடவும் வழிகோலியது.நாட்டின் மனிதவளங்கள் ஒன்றுபடாமல் எதிரெதிர்த்திசைகளில் முரண்பட்டுப் பயணிக்கவும் மோதவும் பொருளாதாரம் யுத்தத்தால் விழுங்கப்படவும் ஆட்சியர்கள் வழிவகுத்தனர்.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தல்,ஜனாதிபதித்தேர்தல் என்பவற்றில் 'ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன முன்னணியினர் வெற்றிபெற்றனர்.சந்திரிக்கா அம்மையார் தமிழர்கள் மத்தியில் சமாதானத்தேவதையாக முகம் காட்டினார். ஜனாதிபதித்தேர்தலில் ஆகக்கூடுதாலான 62.28 சதவீதமான வாக்குகளைப் பெற்றார்.இனப்பிரச்சினைக்கு எப்படியாவது நிலையான தீர்வைக் கண்டறியப்போவதாக்க் கூறினார்.வடக்கு கிழக்கு இணைந்த பிராந்தியசபைத் திட்டத்தை வழங்க 2000களில் சந்திதிரிக்கா முயற்சித்தார்.எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பின்மையால் அத்திட்டம் நிறைவேறவில்லை.சந்திரிக்கா சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில் பதினொரு ஆண்டுகள் யுத்தத்தினை நடாத்தினார்.சந்திரிக்கா அம்மையார் 1999 ஜனாதிபதித்தேர்தலிலும் வெற்றி பெற்றும் யுத்தத்தையே நடாத்தினார்.

2005 ஜனாதிபதித்தேர்தலில் அதிஷ்டவசமாக வெற்றி பெற்ற மகிந்த,ரணிலின் ஆட்சிக்காலத்தில் முன்னெடுத்த நோர்வே அனுசரணையில்

மிகுதி 10 ஆம் பக்கம் பார்க்க...



ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற
உறுப்பினர், மட்டக்களப்பு

**மைத்திரி– ரணில் முரண்பாடு இடையில் ஏற்பட்டதால் மகிந்த 2018 இல் மைத்திரியால் பிரதமராக்கபட்டார். சட்ட விரோதமாக 52 நாட்கள் அப்பதவியை மகிந்த வகித்தார். எதிர்க்கட்சியில் இருந்த சில உறுப்பினர்கள் தம்மைத்தாமே விற்றுப்பணம் பெற்றதாகத் தகவல்கள் வெளிவந்தன.மகிந்த தரப்பினர் எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சிப்பீடமேற முற்பட்டனர். அப்படியிருக்கும் சந்தர்ப்பத்தில் 2019 ஏப்ரலில் சகரான் குழுவால் நாட்டின் சில இடங்களில் உயிர்த்த ஞாயிறுப் பிரார்த்தனை வேளையில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டது. இதுவும் ஆட்சி மாற்றத்திற்கான சதிவேலையாகச் சந்தேகம் எழுப்பப்பட்டது. இத்தாக்குதலில் பிறநாட்டு உல்லாசப் பயணிகள் பலர் உயிர் இழந்தனர், காயங்களுக்கும் உள்ளானர்.இதனால் இலங்கை ஆபத்தான நாடாக பிறநாடுகளால் அறிவிக்கப்பட்டதால் உல்லாசப்பயணத்துறை வீழ்ச்சி அடைந்தது. வெளிநாட்டு முதலீடுகளும் பாதிக்கப்பட்டன. இதனாலும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தது.**



# வளமான நாடு வங்குரோத்து நாடானது எப்படி?

நடைபெற்ற அரசு விடுதலைப்புலிகளுக்கு இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையினை முறித்துக்கொண்டு யுத்தத்தினை முழுமூச்சுடன் நடாத்தினார்.பாதுகாப்புச்செயலராக தனது தம்பியான கோத்தபய ராஜபக்சவை நியமித்தார்.ஏனைய ராஜபக்ச உறவுகளையும் இணைத்துக்கொண்டார்.பலநாடுகளது உதவிகள்,கடன்களையும் பெற்றுக்கொண்டு உச்சமான படைக்கல உதவிகளோடு போராடி 2009 மே மாதத்தில் யுத்தத்தை முடிவு செய்தார்.மேலும் 2010 இல் முன்கூட்டியே ஜனாபதித் தேர்தலை நடாத்தி வெற்றி பெற்றார்.வடக்கு கிழக்கு அபிவிருத்தி என்ற பெயரில் பலநாடுகள் அமைப்புகளில் இருந்தும் கடன்கள் உதவிகளைப் பெற்றதோடு மேலதிகமாக சீனாவிடம் இருந்து பெருந்தொகைக்கடன் பெற்று வருவாயற்ற அம்பாந்தோட்டைத் துறைமுகம்,மத்தள விமானநிலையம் என்பவற்றை அமைத்து நாட்டைப்பாரிய கடன்களால் சூழவைத்தார் மகிந்த.கடன்சுமை வட்டிகளோடு அதிகரிக்க,இறுக்க வருவாயற்ற நிலையில் கஜானா காலியானது.யுத்த மமதையால் இறுமாப்படைந்த ராஜபக்சக்கள் இனப்பிரச்சினையே நாட்டில் இல்லை என்றனர்.அடுத்து பாரிய மனிதவுரிமை மீறல்களுக்காக ராஜபக்சக்கள் ஐக்கியநாடுகள் சபையிடம் பொறுப்புக்கூறவேண்டி இருந்தது.

அடுத்து 2015 இல் ஆட்சிக்கு வந்த் மைத்திரி ரணில் கூட்டரசாங்கம் சர்வதேச சவால்களை சரவதேசத்துடன் சார்ந்து நின்று சமாளித்தது,உதவிகள் கடன்களையும் சர்வதேச ரீதியாகப் பெற்றுக்கொண்டது. இருந்தாலும் அம்பாந்தோட்டைத்துறைமுகம் வருவாய் அளிக்காததாலும்,சீனக்கடன் தொல்லையாலும் அத்துறைமுகம் சீனாவுக்கே குத்தகைக்கு வழங்கப்பட்டது.

மைத்திரி-ரணில் முரண்பாடு இடையில் ஏற்பட்டதால் மகிந்த 2018இல் மைத்திரியால் பிரதமராக்கபட்டார்.சட்ட விரோதமாக 52 நாட்கள் அப்பதவியை மகிந்த வகித்தார்.எதிர்க்கட்சியில் இருந்த சில உறுப்பினர்கள் தம்மைத்தாமே விற்றுப்பணம் பெற்றதாகத் தகவல்கள் வெளிவந்தன.மகிந்த தரப்பினர் எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சிப்பீடமேற முற்பட்டனர்.அப்படியிருக்கும் சந்தர்ப்த்தில் 2019 ஏப்ரலில் சகரான் குழுவால் நாட்டின் சில இடங்களில் உயிர்த்த ஞாயிறுப் பிரார்த்தனை வேளையில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது.இதுவும் ஆட்சிமாற்றத்திற்கான சதிவேலையாகச் சந்தேகம் எழுப்பப்பட்டது.இத்தாக்குதலில் பிறநாட்டு உல்லாசப்பயணிகள் பலர் உயிர் இழந்தனர்,காயங்களுக்கும் உள்ளானர்.இதனால் இலங்கை ஆபத்தான நாடாக பிறநாடுகளால் அறிவிக்கப்பட்டதால் உல்லாசப்பயணத்துறை வீழ்ச்சி அடைந்தது.வெளிநாட்டு முதலீடுகளும் பாதிக்கப்பட்டன.இதனாலும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தது.

ஜனாதிபதித்தேர்தல் பாராளுமன்றத் தேர்த்தல்கள் மூலம் ராஜபக்சக்கள் 2019 நவம்பர்,2020 ஆகஸ்ட் காலப்பகுதியில் ஆட்சிப்பீடமேறினர்.அக்காலத்தில் கொரோனா நோய்த்தொற்றும் அதிகரித்தன. இந்த சூழலில் நாடு முடங்கும் நிலை ஏற்பட்டது. பொருளாளாதாரமும் பாதிக்கப்பட்டது.அதே வேளை நாட்டை அறிவியல் பூர்வமாக ஜனாதிபதி,பிரதமர்,அமைச்சர்கள் பரிபாலிக்கவும் முகாமைத்துவம் செய்யவும் வேண்டி ஏற்பட்டது.ஆனால் அவை நடைபெறவில்லை.மோசமான முதலீட்டுக் கொள்கை,மோசமான நாணயக்கொள்கை பின்பற்றப்பட்டதாக,மலேசியாவை அபிவிருத்தி செய்த முன்னாள் பிரதமர் மகதிர்முகமட் கூறியுள்ளார். அந்தவகையில் கோத்தா பின்பற்றிய வரிக்கொள்கை,விவசாயக்கொள்கை,நிதிக்கொள்கை,வெளியுறவுக்கொள்கை,சர்வதேச நிதிநிறுவனங்களுக்கு இடையிலான உறவுக்கொள்கை,தொல்லியல்கொள்கை,ஒரே நாடு ஒரே சட்டம் கொள்கை,வளமுகாமைத்துவக்கொள்கை,பல்லினப்பண்பாட்டியலெதிர்க்கொள்கை,பாதுகாப்புச்செலவீனக்கொள்கை சகலதும் இரண்டரை ஆண்டுகளுக்குள் தோல்வியடைந்துள்ளன.இலங்கை சுதந்திரம் அடைந்தபோது பொருளாதாரத்தில் ஆசியாவில் மூன்றாவது இடத்தில் இருந்ததை அறிவோம்.கோத்தாவின் தவறா பொருளாதாரக்கொள்கையால் ஆசியாவின் கடைசி நிலைக்குத் இலங்கை தள்ளப்பட்டுள்ளது.ஆசியாவில் மட்டுமன்றி, உலகிலேயே எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வரிசையில் காத்துக் கிடக்கும் நாடாக இலங்கை மாறியுள்ளது.இதனை ஆசியாவின் ஆச்சரியம் என்று மட்டும் சொல்ல முடியாது.உலகத்தின் எதிர்மறை ஆச்சரியமாகவும் கூறமுடியும்.மேலும் பணவீக்கம் 60 சதவீதம்,ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அதாவது ஒரு அமெரிக்க டொலர் ரூபா 350 ஆக அதிகரிப்பு,நாட்டின் கடன் 62 பில்லியன் டொலராக அதிகரிப்பு,ஒரு பிரசைக்கான கடன் ஒரு மில்லியன் ரூபாய்,மறைகணிய டொலர் இருப்பு,மறைகணியப் பொருளாதார நிலை இவையெல்லாம் கோத்தாவினதும்,ராஜபக்சக்களதும் எதிர்மறையான ஆசியாவின் ஆச்சரியங்களாகும்.



மொத்தத்தில் இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் பின்பற்றிய குறுகிய அரசியல் இலாப அடிப்படையிலான சிங்கள இனவாத பௌத்த மதவாதக்கொள்கையானது இனரீதியாக மனிதவளத்தை பிளவடையச் செய்து அரசியல் ரீதியாகவும் போராட்டரீதியாகவும் சமூக்கலாசார ரீதியாகவும் மோதலை ஏற்படுத்தியது.மோதலினால் மனித பொருளாதார நிதிவளங்கள் அழிந்தன.மூளைவளங்கள் நாட்டைவிட்டு வெளியேறின.சொந்த நாட்டுக்குப் பணியாற்ற வேண்டிய எமது மூளையர்கள் அந்நிய நாடுகளுக்கு சேவகம் செய்யும் நிலையை இனவாத ஆட்சியாளர்கள் ஏற்படுத்தினர்.துறைசார் வல்லுனர்களின் ஆலோசனைகள அறிவுறுத்தல்கள் புறக்கணிக்கபட்டன. ஆட்சியாளர்கள் பலர் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நிதிகள்,சொத்துக்களைக் குவித்தனர்.அபிவிருத்தி. தொழில்வாய்ப்பு ,கொள்வனவுகளில் ஊழல் மோசடி கையூட்டுகள் பெறப்பட்டதாகத் தகவல்கள் வெளிவந்தன.களியாட்டங்கள்,வீண்விரயங்கள் அதிகரித்தன.இவ்வாறான செயல்கள்,எதிர்மறைச் செயல்கள் எல்லாம் அதிகரித்தமையால் நாட்டின் நிலைமை வங்குரோத்தினைத் தொட்டது.தேசிய ஐக்கியம்,தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு,முற்போக்கான அறிவியல் செயற்பாடுகள்,சமத்துவ சிந்தனை செயற்பாடுகள் விடயங்களில் கவனம் செலுத்தப்படாததால் நாட்டின் பொருளாதார நிலைமை மோசம் அடைந்துள்ளது.74 ஆண்டுகளாகக் கோலோச்சிய ஆட்சியாளர்கள் இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.அதிலும் இனவெறி மதவெறி கூடிய ஆட்சியாளர்கள் சுயலாபம் தேடியதால் இந்நாடு வங்குரோத்தின் பிடியில் சிக்கியுள்ளது.சிங்கள இனவாத ஆட்சியாளர்களால் சுயநல அரசியல் இலாபத்திற்காக மூட்டப்பட்ட இனவெறித்தீ இன்னும் அணையவில்லை,அணைக்கவும் இல்லை.இதனால் தேசிய ஒற்றுமை,நாட்டின் பொருளாதாரம்,பல்லின சகவாழ்வு சௌஜன்யம்,அபிவிருத்தி,வளங்கள்,புரிந்துணர்வு,புத்தியாளர்களின் பயன்பாடு எல்லாம் 1948இல் இருந்து இன்றுவரை எதிரமறையாக கையாளப்படுகின்றன.

பட்டுடை கிடைக்குமென்று கனவுகண்ட மக்களின்,கட்டிய கோவணத்தைக்கூட ஆட்சியாளர்கள் விடமாட்டார்கள் போல் இருக்கின்றது.இப்போதாவது தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை முனவைத்து,நாட்டை நாசமாக்கிக்கொண்டிருக்கும் இனமதவாதத்தீயை ஆட்சியாளர்கள் அணைக்க மாட்டார்களா? என்பதுதான் தமிழர்களதும் முற்போக்கான ஏனைய சகோதர இனத்தவர்களதும் எதிர்பார்ப்பாகும்.

அவ்வாறு நடைபெற்றால் எமது நாட்டை விட்டகன்ற புத்தியாளர்களாலும்,பொருண்மிய ஆளுமையாளர்களாலும் எமது தாய்நாட்டை பொருளாதார,அரசியல்,சமூக நெருக்கடிகளில் இருந்து மீட்க முடியும்.தேசிய ஐக்கியத்தையும் கட்டியெழுப்ப முடியும்.இல்லையேல் அயல்நாடுகளிடம் அட்சயபாத்திரத்தை ஏந்தும் ஆண்டியர் நிலைதான் தொடரகதையாகும்.கடன்களை இறுப்பதற்காக வளங்களை விற்று நாட்டை அந்நியர்களின் நவகாலணித்துவ வலையில் சிக்கவைக்கும் நிலைமை தொடர்ந்தும் ஏற்படும்.ஏற்கனவே கடன்களைத் தீர்க்க முடியாத அவலத்தால் அம்பாந்தோட்டைத் துறைமுகம்,போட்சிற்றி போன்ற வளங்களை சீனாவிடம் இழந்ததோடு மட்டுமல்லாமல் பலமான அமெரிக்கா,பிரித்தானியா,பிரான்ஸ்,அவுஸ்ரேலியா போன்ற மேற்குலக நாடுகளுடனும் இந்தியா,யப்பான் போன்ற அயல் நாடுகளுடனும் ஆட்சியாளர்கள்தப்பபிப்பிராயங்களையும்,முரண்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

இதனால் உலக வங்கி,சர்வதேச நாணயநிதியம் போன்ற நிதிநிறுவனங்கள் எமது நாட்டை நம்பமுடியாதநிலையில் உள்ளன.கடன்களை மீளொப்டைக்கும் நம்பகமான நிலை கணிப்பீட்டில் இலங்கை 3சீ நிலையில் இருந்து 2சீ நிலைக்குத் தள்ளப்பட்டு பின்னர் 1சீ நிலைக்கு மேலும் இறக்கப்பட்டு தற்போது ஆர்டி என்னும் இழிவான ஆக மோசமான நிலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.இதனால் பிறநாடுகள் உட்பட நிதிநிறுவனங்கள் இலங்கைக்குக் கடன் வழங்க மிகவும் அஞ்சுகின்றன.இப்போதாவது புரிகிறதா? தமிழர்களை ஒடுக்கவும் அழிக்கவும் சிங்களத்தலைவர்களால் கையில் எடுத்த இனவாத மதவாதத்தீ தமிழர்களை மட்டுமல்ல ஏனைய இனத்தவர்களையும் நாட்டையும் கணிசமான அளவு எரித்துள்ளது என்பதை.இப்போது தமிழர்கள் மட்டுமல்ல முஸ்லிம் சிங்கள மக்களும் ஓரளவு உணர்ந்துள்ளனர்.ஆனால் ஆட்சியாளர்களின் அதிகாரப்பசி இவற்றையெல்லாம் உணராமல் நிறங்களை மாற்றியாவது,அதிகார நாற்காலியை அபகரிப்பதிலே குறியாக இருக்கின்றது.இனத்தால்,மதத்தால்,யுத்தத்தால்,சகரானின் குண்டுவெடிப்பால் சிங்கள மக்களை ஏமாற்றிய சிங்கள ஆட்சியாளர்கள் இனியும் சிங்கள மக்களை ஏமாற்ற என்ன விதமான கண்டுபிடிப்பில் இறங்கியுள்ளார்கள் என்பதை இனிவரும் காலம் காட்டும்.ஏமாளிகளாய் கோமாளிகளாய் மக்கள் உள்ளவரை ஏமாற்றும் அதிகாரர்களுக்குப் பிர்சினைகள் இல்லை.முற்போக்கான திசையில் அறிவியல் பூர்வமாக மக்கள் விழித்தால் மட்டுமே மறுமலர்ச்சி அடையும் நம்நாடு.



**பட்டுடை கிடைக்குமென்று கனவுகண்ட மக்களின், கட்டிய கோவணத்தைக்கூட ஆட்சியாளர்கள் விடமாட்டார்கள் போல் இருக்கின்றது. இப்போதாவது தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை முனவைத்து, நாட்டை நாசமாக்கிக் கொண்டிருக்கும் இனமதவாதத்தீயை ஆட்சியாளர்கள் அணைக்க மாட்டார்களா? என்பதுதான் தமிழர்களதும் முற்போக்கான ஏனைய சகோதர இனத்தவர்களதும் எதிர்பார்ப்பாகும். அவ்வாறு நடைபெற்றால் எமது நாட்டை விட்டகன்ற புத்தியாளர்களாலும், பொருண்மிய ஆளுமை யாளர்களாலும் எமது தாய்நாட்டை பொருளாதார, அரசியல்,சமூக நெருக்கடிகளில் இருந்து மீட்கமுடியும்.தேசிய ஐக்கியத்தையும் கட்டியெழுப்ப முடியும். இல்லையேல் அயல்நாடுகளிடம் அட்சயாத்திரத்தை ஏந்தும் ஆண்டியர் நிலைதான் தொடரகதையாகும். கடன்களை இறுப்பதற்காக வளங்களை விற்று நாட்டை அந்நியர்களின் நவகாலணித்துவ வலையில் சிக்கவைக்கும் நிலைமை தொடர்ந்தும் ஏற்படும்**


ஓம் சக்தி
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
மட்டக்களப்பு - வந்தாறுமூலை
அருள்மிகு ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலய
வருடாந்த அலங்கார உற்சவம் -2022
ஆரம்பம்
02.08.2022
[செவ்வாய்க்கிழமை]
உலகமெல்லாம் ஆண்டிடுவாள் எங்கள் முத்து மாரி
உலகளந்தோன் சகோதரியாம் எங்கள் முத்து மாரி
ஈசரிடம் முத்தைவாங்கி எங்கள் முத்து மாரி
ஈசருக்கே முத்தெறிந்தாள் எங்கள் முத்து மாரி
வந்தாறுமூலை பதிதனில் வந்தமர்ந்தாள்
எங்கள் முத்து மாரி
நிறைவு
08.08.2022
[திங்கட்கிழமை]
ஆதி சக்தி அடியார்களே!
பாற்குடப் பவணி 05.08.2022
ஆலய உற்சவ நிகழ்வுகள்
02.08.2022 செவ்வாய்க்கிழமை 01ம் நாள் வந்தாறுமூலை ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து மடை எடுத்தலும், திருக்கதவு திறத்தல் வைபவம் இடம் பெறும்.
03.08.2022 புதன்கிழமை 02 ம் நாள் விஷேட அபிஷேக பூசையும் வேப்பையடிப்பிள்ளையார் (VC வீதி) ஆலயத்திலிருந்து பட்டெடுத்தல் வைபவமும் நடைபெறும்.
04.08.20222 வியாழக்கிழமை 03ம் நாள் விஷேட அபிஷேக பூசை இடம் பெறும்.
05.08.2022 வெள்ளிக்கிழமை 04ம் நாள் காலை 8.00 மணிக்கு மருங்கையடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பாற்குடப்பவனியும் விஷேட பால் அபிஷேகப்பூசையும் இடம்பெறும். மாலை வீரகம்பம் வெட்டும் சடங்கும் விஷேட பூசையும் இடம்பெறும்.
06.08.2022 சனிக்கிழமை 5ம் நாள் விஷேட அபிஷேக பூசையும், மாலை அம்பாளின் ஊர்வலமும் இடம்பெறும்.
07.08.2022 ஞாயிற்றுக்கிழமை 6ம் நாள் அம்பாளின் விநாயகர்பானை எழுந்தருளப்பண்ணுதலும், விஷேடஅபிஷேக பூசையும் இடம்பெறும்.
08.08.2022 திங்கட்கிழமை 7ம் நாள் அதிகாலை 3.00 மணிக்கு பள்ளயச்சடங்கும், தொடர்ந்து தீமிதிப்பு, காலை திருக்குளிர்த்தி இடம்பெற்று களுவன்கேணி இந்து சமுத்திரத்தில் தீர்த்தோற்சவமும் ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்பட்டு இனிதே நிறைவுபெறும்.
குறிப்பு: 08.08.2022 அம்பாளுக்கு நேர்த்திக்காக வரும் ஆடு, மாடு, கோழிகள் என்பன பிற்பகல் 3.00 மணிக்கு ஏலத்தில் விடப்படும்
தீ மிதிப்பு
08.08.2022
திங்கட்கிழமை
அதிகாலை 5.00 மணி
அனைவரும் வருக!
அம்மன் நல்லாசி பெறுக!
"சுபம்"
இறைபணியில்
ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபை
மடோனா அச்சகம், செங்கலடி 077 7718224